# FINE ARTS.

ஹிந்து தேசத்து

# சிற்ப சித்திர கீத நூல்களைப் பற்றி

லார்டு நேபியர் அவர்களால்

செய்யப்பட்ட

## உபந்நியாசத்தின்

மொழிபெயர்ப்பு.

முதற்பாகம்—சிற்பம்.

MADRAS:
Published by the
MADRAS SCHOOL BOOK AND VERNACULAR LITERATURE SOCIETY,
AND SOLD AT THEIR DEPOSITORY, OLD COLLEGE.
1870.

COPY RIGHT.

ஹிந்துதேசத்து

# சிற்ப சித்திர கீத நூல்களைப் பற்றி

லார்டு நேபியர் அவர்களால்

செய்யப்பட்ட

## உபநியாசத்தின்

மொழிபெயர்ப்பு.

முதற்பாகம்—சிற்பம்.



New Presidency College.

MADRAS:
Published by the
MADRAS SCHOOL BOOK AND VERNACULAR LITERATURE SOCIETY,
AND SOLD AT THEIR DEPOSITORY, OLD COLLEGE.
1870.

COPY RIGHT.

Printed by H. W. LAURIE, at the Christian Knowledge Society's Press,
18, Church Street, Vepery.

# சிற்ப சித்திர கீத நூல்கள்.

கனவான்களே!

இதற்கு முந்தி இவ்விடத்தில் பிரசங்கித்திருக்கிற மகா வித்துவான்கள் நான் தெரிந்தெடுத்திருக்கிற விஷயத்திலும் அதிகப் பிரயோஜனமும் இன்பமுமான விஷயங்களைப் பற்றி உங்கள் முன்னிலையில் பேசியிருக்கின்றனர். நமக்கு அவசியமானவைகளாயும், நமது க்ஷேமத்தைப் பற்றினவைகளாயும், நமது இகபர நன்மையைத் தழுவினவைகளாயுமிருக்கின்ற சமயநூல், நீதிநூல், சரித்திரம், ஒழுக்கநூல் ஆகிய இவைகளுடன் சம்பந்தப்பட்ட விஷயங்களைப்பற்றி இவ்விடத்தில் ஒன்றன்பின்னொன்றாகப் பிரசங்கஞ்செய்யப்பட்டிருக்கிறது. நான் எடுத்துக்கொண்ட விஷயமோவெனில் அவ்வளவு சிறந்ததல்லவாயினும், அது இத்தேசத்தவர்கள் முன்னிலையில் இதுவரையும் பிரசங்கிக்கப்படாததாயும், அவர்கள் மனதில் பற்பல எண்ணங்களை விளைவிக்கத்தக்கதாயும், நான் தாராளமாய்ப் பேசத்தக்க பொதுவிஷயமாயும், எனது சக்திக்கமைந்ததாயிராவிடினும் எனது விருப்பத்துக்கு ஒத்ததாயுமிருப்பதால், இதைப்பற்றி எனக்குப் போதுமான ஞானமில்லாமற்போனாலும், இது விஷயத்தில் எனக்குண்டாயிருக்கும் வாஞ்சையினாலேயே பேசத்தொடங்கினேன்.

இப்பிரசங்கத்திற்கு விஷயமான நூல்கள் யாவையெனில், சாதாரணமாய்ச் சிற்பம், சித்திரம், பிரதிமை நிர்மாணம், கீத வாத்தியம் ஆகிய இவைகளே. இந்நூல்களைச் சகல ஜனங்களும் இயல்பாகவே இம்முறைப்பட வைத்திருக்கின்றனர். இப்படி சர்வஜன சம்மதமாயுண்டான இம்முறைவைப்பு இந்நூல்களுள் ஒன்றற்கொன்றுள்ள தாரதம்மியத்தை விளக்கு

கின்றது. ஆதலால் யானும் அவ்வொழுங்கை அநுசரி,
அவைகளை இங்கெடுத்துரைத்தேன். அவைகளில் சிற்பசாஸ்
திரமானது சௌக்கியத்திற்கு இன்றியமையாத வாசஸ்தலங்
களைக் கட்டுவதற்கும், பார்வைக்கு அலங்காரமான மாடமா
ளிகை கூடகோபுரங்களைச் சமைப்பதற்கும் ஆவசியகமான
நூலாம். இச்சாஸ்திரத்திற்கும், யந்திரசாஸ்திரம், பலன்தரு
முயற்சி, வாணிபம், பொது க்ஷேமம், பொது அர்த்தம், பொது
சௌக்கியம், சமயாசாரம் ஆகிய இவைகட்கும் நெருங்கிய
சம்பந்தமுண்டு. இது தேவாலயங்கள், நியாயஸ்தலங்கள்,
பண்டசாலைகள், நடனசாலைகள் முதலியவைகளை உண்டாக்
குவதற்கு வேண்டிய நூலாம். இது அநேகருக்கு மிகுந்த
பிரயோஜனத்தையும் இன்பத்தையும் அளிக்கின்றது. இது
மற்ற நூல்களுக்கு இருப்பிடமானதும், ரக்ஷாஸ்தானமான
தும், எல்லாவற்றிலும் அதிக உத்கிருஷ்டமானதும், சர்வவியா
பகமானதும், சாசுவதமானதுமாம். இதற்கு இரண்டாவதாக
எடுத்துரைக்கப்படுகின்ற சித்திரமானது பிரபஞ்சத்திலுள்ள
தாபரசங்கம வர்க்கங்களின் சகலவித ஸ்வரூபங்களையும்,
தோற்ற விகற்பங்களையும் யதார்த்தமாய்த் தெளிவாய் விளக்குவ
தற்கு ஏற்ற கருவியாம். எவ்வளவு சூக்ஷ்மமானதாயிருப்பினும்
தூரியக்கோலால் வரையமுடியாத சொரூபமும், எவ்வளவு
நிலையற்றதாயிருப்பினும் அதனால் குறிக்கக்கூடாத விஷய
மும், அது கொண்டாடக்கூடாத சித்தாந்தமும், அது திரட்டி
விளக்கிக்காட்டாத மனோபாவமும் கிடையா. சித்திரமானது
சகலரும் அறிந்துகொள்ளத்தக்க பாஷையாம். பிரதிமை நிர்
மாணமோவெனில் அவ்வளவு விரிவானதல்லாவிடினும்,
மற்ற நூல்களைப்பார்க்கிலும் மிகக்கடினமானதாம். அதன்
நோக்கம் மிகச்சிறந்ததும், அதற்கு வேண்டிய சாதனங்கள்
அதிக விலைபெற்றதும், அதன் பணி கடினமான உழைப்புள்ள
தும், அதைச் செய்துமுடித்தல் மிகுந்த பொருட்செலவுள்ளது
மாயிருக்கின்றது. அது சிற்பிக்கு நீடித்த புகழையும், ஜனங்
களுக்கோ சொற்ப இன்பத்தையும் தருகின்றது. மேற்சொல்
லிய நாங்கு நூல்களும் சிற்பநூலின்வழியாய்ச் சாஸ்திரத்தோ

டும்; சித்திரம், பிரதிமை நிர்மாணம் இவைகளால் சரித்திரத்தோடும் சமயநூலோடும் சம்பந்தப்பட்டிருப்பதன்றியும், கீதவாத்தியநூலின் மூலமாய்ச் செய்யுளோடும் சம்பந்தப்பட்டிருக்கின்றன. கானசாஸ்திரமானது கேவலம் மானிட மனோபாவங்களை வெளியிடுங்கருவியாக மதிக்கப்படுங்கால், அது மற்ற இரண்டு நூல்களையும்போல அவ்வளவு சரியாய் விளக்கமாட்டாது. அந்தந்த ஜாதியாருக்குள் சாதாரணமாய் வழங்குகிறதும், கடவுள் துதியைப் பற்றியதுமாகிய பாட்டுகளைத் தவிர மற்றப்படி சங்கீதமானது ஒழுங்கின்றி இருந்தபோதிலும், அது மனதைக் கவர்ந்து பரவசமாக்கத்தக்க சக்தியுள்ளது. அது உள்ளத்திலுள்ள ஒவ்வொரு சுகதுக்கத்தையும் தகுந்தபடி விளக்குகிறதுமன்றி, ஒருவருடைய மனோநிலைமையை மற்றொருவருடைய உள்ளத்தில் மிகுந்த வலிமையோடு செலுத்தும் தன்மையையுமுடையது. இந்நூல்களை அததற்குரிய குணவிசேஷங்களால் பகுத்தறிய முயன்றால், சிற்பநூலானது அலங்காரத்தோடு கூடிய உபயோகத்தையும்; சித்திரமானது அறிவையும், அழகையும்; பிரதிமை நிர்மாணம் பிழையற்ற மனோபாவத்தையும்; கானசாஸ்திரம் மனதின் எழுச்சிகிளர்ச்சிகளையும் விளக்குகின்றனவென்று சொல்லலாம்.

இந்நூல்களுள் ஒவ்வொன்றினுடைய நோக்கமும் எவ்வளவுதூரம் நிறைவேறியிருக்கின்றது, அதை இன்னும் எவ்விதமாய்த் தேர்ச்சிசெய்யலாம் என்று அறியும்பொருட்டு, அவை இத்தேசத்தில் எந்நிலைமையில் இருக்கின்றனவென்பதை விசாரிக்கப்புகுவோம்.

சிற்பநூலானது சாதனம் மாதிரி என்னப்பட்ட இரண்டு அம்சங்கள் அடங்கியது.

சாதனத்தைப்பற்றிப் பேசுங்கால், சாதனங்களில் நல்லனவற்றைத் தெரிந்து அவற்றைச் சரியானபடி உபயோகித்தால், சாதனமனைத்தும் உத்தமமானவையென்றே சொல்லலாம். சிற்பி அதிகமாய்க் கையாடும் சாமான்களான கருங் , செங்கல், மரம், இரும்பு இந்நாலும் அததற்குரிய உபயோ

தத்தையுடையன. விவேகமுள்ள ரசஞர்கள் இவற்றுள் ஒ
றையாவது தள்ளவும் குறைவாய் மதிக்கவும் மாட்டார்கள்.
சிற்பி சாமர்த்தியமுள்ளவனுனல் அங்கங்கே மலிவான சாத
னங்களைத் தெரிந்துகொண்டு கூடியவளையில் சீர்திருத்தி, அ
வற்றின் பற்பல தன்மைக்குரியபடி பூச்சு அலங்காரமுதலிய
வேலைகளுக்கு உபயோகிப்பான். திறமையுள்ள சிற்பிகள்
பிரபஞ்சத்திலுள்ள பொருள்களைத் தங்கள் வேலைக்கிணங்கச்
செய்துகொள்வார்களேயன்றி அவற்றிலொன்றையும் இகழார்
கள். ஆதலால் சாதனங்களைத் தெரிந்தெடுத்துக்கொள்வதில்
சிற்பியானவன் சாதனமிருக்கும் இடம், கட்டடத்தின் நோக்
கம் ஆகிய இவ்விரு விஷயங்களையும் முக்கியமாய் ஆலோ
சித்து, ஏற்ற சாதனத்தைத் தெரிந்துகொண்டபின்னர் அதைச்
சரியானபடி உபயோகிப்பான்.

கல் திரளாய் அகப்படும் தேசத்தில் கல்லை உபயோகிப்
பான். அது கெட்டியாயும் வேலைசெய்வதற்குக் கடினமாயு
மிருக்குமாயின், கட்டடத்தின் வேலை பரும்படியாயிருக்கும்.
பார்ப்பவர்கண் கட்டடத்தின் ஆகிருதியினலே திர்ப்தியு
டையும். ரசஞானமானது தேசகால வர்த்தமானங்களுக்கு இ
ணங்கிப்போகும்தன்மையுடையதாகையால், அது சலவைக்
கல்லினின்றும் எதிர்பார்க்கக்கூடியதைக் கருங்கல்லினின்
றும் எதிர்பார்க்கமாட்டாது. வாஸ்தவமாகவே அது ஒரு கடின
மான பதார்த்தத்தின்மீது அருமையும் அனுவசியகமுமான
உழைப்பை உபயோகிக்கச் சம்மதியாது. கல் மிருதுவாயும்
லேசாய் உளியாடத்தக்கதாயுமிருக்குமாயின், அப்பொழுது
சாதனத்தை இஷ்டப்படி பலவகையான அலங்கார வேலைக
ளுக்கு உபயோகிக்கலாம். கல் சுலபமாய் அகப்படாத
இடங்களில் செங்கல் முதலியவற்றைச் செய்யத்தகுந்த மண்
அகப்படலாம். அது திறமையில்லாதவர்கள்கையில் மிக இ
ழிவானதாயும், திறமையுள்ளவர்கள்கையில் அதிசிரேஷ்ட
னதாயுமிருக்கின்றது. திறமையற்றவர்கள்கையில் அது
வாயிருக்கிறதென்பதற்குத் திருஷ்டாந்தம் நமக்குப் பி
யட்சமாயிருக்கிறது. அதைக் கிரமமாய்க் கையா

அதுவே அழிவில்லாததாயும், நாநாவித வர்ணமுள்ளதாயும், பளபளப்பான மேனியையுடைத்தானதாயும், மிகுந்த அழகுள்ள பலவகை வேலைகளுக்கு அமயத்தக்கதாயும் இருக்கின்றது. ஒருவேளை, கல், மண் இவ்விரண்டும் அகப்படாமற்போனாலும், அல்லது அதிக செலவு பிடிக்கத்தக்கதாயிருந்தாலும் அப்படிப்பட்ட இடங்களில் மரங்கள் விஸ்தாரமாய் அகப்படலாம். கட்டடங்களை மிக எளிதாயும் துரிதமாயும் செய்துமுடித்தற்கும், சில தேசங்களில் குடியிருப்புக்கு வேண்டிய வசதிக்கும், சகல தேசங்களிலும் பார்வைக்கு விசித்திரமான வேலைகளைச் செய்வதற்கும் மரத்தைப்போல மற்றொன்றும் இசைந்துவராது. இரும்போவெனில் கட்டடத்தின் உத்தேசியத்துக்குத் தக்கபடி உபயோகமாகிறதேயல்லது, சமீபத்தில் கிடைக்கிறதென்கிறதினால் அதைச் சகலவித கட்டடங்களுக்கும் உபயோகிக்கக்கூடாது. வேலை தீர்ந்த இரும்புச்சாமான்களை எவ்விடங்களுக்கு வேண்டுமானாலும் மிதமான செலவில் கொண்டுபோகலாம்.

சாமான்களைத் தெரிந்தெடுத்துக்கொள்வதில் திறமையுள்ள சிற்பி சமீபத்தில் எளிதாய்க் கிடைக்கும் சாமான்களைக் கொண்டு கட்டடங்களைக் கட்டுவானென்று மேலே சொல்லியிருந்தபோதிலும், சிலவிடத்தில் அப்படி அமையாது. எந்த சாமானையும் சரியானபடி உபயோகித்தால் அதை நமக்கு வேண்டியபடி பிரயோஜனப்படுத்துகிறதுமாத்திரமல்ல, பார்வைக்கு அலங்காரமாகும்படியும் செய்யலாம். பொருட்களை ஆராய்ச்சிசெய்யுந்தோறும் இவ்வுண்மை தெளிவாகும். ஆயினும் சில விஷயங்களில் சமீபத்தில் அகப்படும் சாமான்களைக்கொண்டே முடிக்கக்கூடாத கட்டடங்கள் சில உண்டு. அவை கோட்டை கொத்தளங்கள், கடலை
பாட்டிய கட்டடங்கள், பாய்ச்சலுக்கு உபயோகமான
ணைக்கட்டுமுதலிய கட்டடங்கள், விசேஷ காரணங்க
ல் கலகலத்துப்போகத்தக்க கட்டடங்கள் முதலியவாம்.
பு சர்வ விஷயங்களுக்கும் உபயோகப்படும் சாதனமா
தால், இவ்வித கட்டடங்களுக்குக் கெட்டியிரும்பை

யும் தகட்டிரும்பையும் எவ்வாறு உபயோகப்படுத்தலாமென்பது ஆராய்ச்சிசெய்யத்தக்க விஷயமாயிருக்கிறது. இந்த நூதன விஷயம் எவ்வளவுதூரம் நிறைவேறுமென்று இப்போது நிர்ணயிப்பது அசாத்தியம். ஆனால் சாதாரண கட்டடவேலைகளுக்கு வார்ப்பிரும்பை உபயோகப்படுத்துகிற பட்சத்தில் வேலைப்பாடான அலங்காரங்களை விலக்கவேண்டியது அவசியம். ஏனெனில் வார்ப்பிரும்புவேலைகள் லேசாயும், சொகுசாயும், வேலைப்பாடற்றனவாயும் இருக்கவேண்டும். கேவலம் யந்திரங்களால்மாத்திரம் செய்யப்படும் விசித்திரவேலைகள் அவ்வளவு புகழத்தக்கவல்ல. அவ்வித வேலைகள் மனிதனுடைய கைத்தொழிலால் செய்துமுடிக்கும்பொழுதுமாத்திரம் வியக்கத்தக்கதாயிருக்கின்றன.

சாமான்களைத் தக்கபடி தெரிந்தெடுத்துக்கொண்டபின்னர் அவைகளைச் சரியானபடி உபயோகிக்கவேண்டியது சிற்பியின் கடமையாயிருக்கின்றது. சரியானபடி உபயோகிக்கிறதாவது: அந்தந்த சாமான்களை மற்றொன்றால் மறைக்காமலும், வேறொரு பொருள்போலத் தோன்றும்படி செய்யாமலும் இருத்தலாம். அப்படி மறைப்பதும், வேறொன்றுபோலத் தோன்றும்படி செய்வதும் சிற்பவேலைகளில் அநேக கெடுதிகளுக்கும் விபரீதங்களுக்கும் ஏதுவாகும். சாமான்களிலுள்ள பழுதையும், வேலைக்காரனுடைய திறமையற்ற வேலையையும் வெளிக்குத் தோன்றாமற் செய்வதே மறைத்தலாம். அதனால் சிற்பியினுடைய யுக்திக்குறைவும், பயிற்சியின்மையும் விளங்கும். அவன் சாமான்களை உபயோகிக்கவேண்டிய முறையை அறிந்திருப்பானேயாகில் அவைகளை அவ்வாறு மறைக்கமாட்டான். ஒரு சாமானை மற்றொரு சாமான்போல் தோன்றும்படி செய்தல் மறைத்தலைக்காட்டிலும் அதிகக் கேடானது. ஒரு சாதனத்தாற் செய்துமுடிக்கவேண்டிய வேலையை மற்றொரு சாதனத்தைக்கொண்டு செய்வது சா
திரவிரோதமாயிருப்பதுமன்றி, பார்க்கிறவர்களுக்கும் ஒன்
மற்றொன்றுபோலக் காட்டுகிறது. அதனால் பார்வைக்கு
தப்புண்டாகிறதே தவிர அதன் மாறாட்டம் தெரியாமற்

கிறதில்லை. மாருட்டமானது நீதிசாஸ்திரத்தில் எவ்வளவு நிந்திக்கத்தக்கதோ, கைத்தொழிலிலும் அவ்வளவு இகழத்தக்கதாயிருக்கின்றது. ஆனாலும் மறைவையும் மாறுபாட்டையும் இப்படி நிந்தித்ததினாலே கட்டடத்தின் வெளிப்புறங்களில் சித்திரவேலையாவது வர்ணவேலையாவது செய்யக்கூடாதென்று தாற்பரியமல்ல, அவை அவசியம் செய்யவேண்டியவைகளே. ஏனெனில் அவை மரத்தைப்போலக் கெட்டுப்போகத்தக்க சாமான்களைக் காப்பாற்றுவதற்கும், இரும்பைப்போலப் பார்வைக்கு லட்சணமல்லாததை அலங்கரிப்பதற்கும் அவசியமாயிருக்கின்றன. ஆனால் செங்கல் கட்டடத்தின் வெளிப்புறத்தில் சன்னமோட்டி அது கல்லைப்போல் தோன்றும்படி வர்ணம்வைப்பது எப்பொழுதும் பிசகு. அவ்வாறே மரத்தூணையாவது இரும்புத்தூணையாவது சலவைக்கற்றூண்போலத் தோன்றும்படி செய்வதும் பிசகாம். ஆனால் கட்டடத்தில் உபயோகித்திருக்கிற சாமான்களை ஒளிக்கக் கருதாமல் அவைகள் உளுத்துப்போகாமலிருக்கும்பொருட்டும், பார்வைக்கு வட்சணமாயும், மனோக்கியமாயும் இருக்கும்பொருட்டுமாத்திரம் இரும்பு மரம் முதலியவற்றின்மேல் வர்ணம் வைப்பது பிசகல்ல. சாமான்களை உபயோகிக்கும் விஷயத்தில் மேற்கூறிய விதிகள் சரியானால் அவை இத்தேசத்தில் கைக்கொள்ளப்படாதிருப்பதுமாத்திரமல்ல, விஷயஞானமுள்ளவர்களெல்லாம் திக்கப்படும்படி அவைகள் முற்றிலும் மீறப்பட்டிருக்கின்றனவென்பது பிரத்தியட்சமாய்த் தோன்றுகிறது. கட்டடங்களுக்குச் சாமான்களை உபயோகப்படுத்தும் விஷயத்தில் எவ்வளவு பிசகக்கூடுமோ, அவ்வளவும் இச்சென்னைநகரத்திற் காணலாம். ரெயில்வே டேஷன், ஹைகோர்ட்டு, சஸ்த்றம் ஹௌஸ், கோட்டை ல் கடல்முகமாயிருக்கும் கட்டடங்கள் ஆகிய இவை யா மேற்சொன்னதற்குத் திருஷ்டாந்தங்களாயிருக்கின்றன. பங்காற்றை எதிர்த்துநிற்கக் காலாக்குச் சக்தியில்லாததி மேற்சொன்ன கட்டடங்கள் பார்வைக்கு விகாரமாயும், தும், அலங்கோலமாயும் இருக்கின்றன. அருகாமை

யில் வேண்டியமட்டும் அதிக நேர்த்தியான கற்களும், நாம் நடக்கும் பூமியிலேயே உப்பங்காற்றினால் உளுத்துப்போகாதிருக்கும்படியான செங்கல் முதலியவைகள் ஆகத்தக்க மண்வகைகளும் நிறைந்திருந்தும் இக்கட்டடங்கள் இப்படியிருக்கின்றன. சாமான்களை மறைக்காமல் சரியானபடி உபயோகப்படுத்திக் கட்டுவதற்கு இப்பொழுதுதான் துவக்கியிருக்கிறது. அதற்கு பிரிசிடென்ஸி காலேஜும், ஸெயிலர் ஹோமும் திருஷ்டாந்தங்களாம். இவ்விதமாய்க் கட்டுமுறையைக் கற்றுக்கொள்வது எளிதில் கூடாததாயினும், இனி இவ்விதக் கட்டடங்கள் விர்த்தியாகுமென்பதற்கு இவை முன்குறிகளாயிருக்கின்றன.

நம்முடைய பிழைகளின் பிரஸ்தாபத்தை இம்மட்டில் நிறுத்தி, இனி நமது அக்கம்பக்கத்தாரிடத்தில் உண்டாயிருக்கிற லோபங்களைக்குறித்துப் பேசுவோமாக. கொஞ்சநாளைக்குமுன்பு இரண்டு ஹிந்துராஜாங்கத்துக்குட்பட்ட நாடுகளில் அங்கிலேயருடைய முயற்சியினால் அவர்களுடைய விசாரணையின்கீழ் இரண்டு பெரிய கட்டடங்கள் கட்டுவிக்கப்பட்டன. அவை பெங்களூரிலும், திருவனந்தபுரத்திலும் கட்டியிருக்கிற பப்ளிக் ஆபீஸுகளேயாம். இவ்விருநாடுகளிலும் விசேஷசாமான்கள் பரிபூரணமாயிருக்கின்றன. வேண்டிய திரவியமுமுண்டு. மைசூர் ராஜ்ஜியம் கருங்கல்லுக்கும், திருவனந்தபுரம் மரத்துக்கும் குடியிருப்பாயிருக்கின்றன.

பெங்களூரில் கட்டுகிற பாரிக்கட்டடங்களை நன்றாய் வெந்ததாயும், உறுதியானதாயும், நல்ல நிறமுள்ளதாயுமிருக்கிற செங்கல்களால் வெளிச்சுவர்களையும் அவ்விடத்தில் எளிதாயும், விசேஷசெலவின்றியும் அகப்படக்கூடிய வெளுத்த நிறமுள்ள கருங்கல்லால் தூண்கள், மூலைகள், எழுதகங்கள் முதலியவைகளையும் கட்டவேண்டியது சஹஜம். இத்தன்மையான கட்டடத்தைப்பார்க்கிலும் சுபாவமானது அழகுள்ளதும், சாசுவதமானதுமான பலவித வேலைப்பகள் அமைந்த கட்டடத்தை மனதினால் ஊகித்தலும் அரு

யாம். இப்படிக் கட்டவேண்டியதற்குப்பதிலாகச் சுண்ணாம்பினால் மூடாவிடில், உளுத்துப்போகத்தக்க சாமான்களைக் கொண்டு ஒன்றின்மேலொன்று குவித்துவைத்திருக்கிறாப்போல விஸ்தாரமான கட்டடங்களைக் கட்டியிருப்பதில் கட்டடமுழுமையும் பார்வைக்கு ஒரே நிறமுள்ள மட்டிச்சாந்தில் முழுகியிருக்கின்றது.

எளிதில் கிடைக்கும்படியான சாதனத்தின் குணாகுணங்களுக்கும், வெயில் காற்று மழை முதலியவை தாக்காமலிருப்பதற்கும் ஏற்றபடி அழகான மாதிரியாய்க் கட்டடங்களைக் கட்டத்தக்க திறமையை முற்காலங்களில் மலையாள தேசத்தில் சிற்பிகள் அடைந்திருந்தார்கள். அம்மாதிரியான கட்டடங்களை அவ்விடத்தில் சொற்பமாய் இன்னும் காணலாம். கட்டடத்தில் சுமைதாங்கும் பாகங்களை செங்கல் அல்லது துருக்கல்லாலும், தூண்கள், தாழ்ந்த இறைவானங்கள், உயர்ந்த மச்சுகள், தழைந்த தாழ்வாரங்கள், கவிந்த முகப்புகள் ஆகிய இவைகளை விநோதமாய் வேலைசெய்யப்பட்ட அத்தேசத்திற்குரிய சிறந்த மரவகைகளாலும் கட்டியிருக்கிறார்கள். திருச்சூர் தேவஸ்தானத்தின் கோபுரவாயில்களும், தலச்சேரியிலிருக்கும் கோவிலும், திருவனந்தபுரத்து அரமனையின் பழைய பாகங்களும், பத்மநாபபுரத்தில் திருவனந்தபுரத்துச் சிற்றரசர்கள் புராதனமாய் வசித்துவந்த அதிசயமான அரமனையும் அத்தேசத்தின் சிற்பசாஸ்திரத் தேர்ச்சிக்குச் சிறந்த திருஷ்டாந்தங்களாயிருக்கின்றன. இவ்வாறு சிறப்புற்றோங்கியிருந்த இவ்வித்தை ஐரோப்பிய மாதிரிகளுக்கு இடங்கொடுத்து விரைவாய் க்ஷீணதசையை அடைந்துகொண்டுவருகிறது. அத்தலத்தில் அகப்படும் சாமான் ...ளைக்கொண்டு சுதேசமாதிரிப்படி இப்போதுள்ள நாகரிக ...ற்கிணங்க திருவனந்தபுரத்தில் பப்ளிக் ஆபீஸுகளைக் ...டுவதற்கு நல்ல சமயம் வாய்த்திருந்தது. அக்கட்டடங்க... கட்டின சிற்பி யுக்தியுள்ளவனாயிருந்தால், கட்டடத் ... உட்பக்கங்களைச் செங்கல் அல்லது துருக்கல்லாலும், ...ரங்கள் தூணணிகளைத் தேக்கு பலாமரங்களாலும்

கட்டி, சென்றகால வருங்காலங்களுக்கு இசையும்படியாயும், பார்வைக்கு அந்தமாயும், மழை காற்று இவைகளை எதிர்க்கும்படியாயும், தேசாசாரத்துக்கொத்திருக்கும்படியாயும் கட்டியிருப்பான். அப்படிச் செய்யாமல் அந்த நல்லசமயத்தை இழந்துவிட்டார்கள். பணச்செலவிலாவது, நன்றாய்க் கட்டவேண்டுமென்ற நோக்கத்திலாவது குறைவில்லாதிருந்தும், அந்நியமாதிரியைத் தடுக்க முடியாமல், இந்நூற்றாண்டின் துவக்கத்தில் ஐரோப்பாதேசத்திலுள்ள கைத்தொழிற்சாலைகளிலொன்றில் ஏற்படுத்தப்பட்ட மாதிரிபோன்ற ஒரு சாதாரணமான சுண்ணாம்புப் பூச்சுக்கட்டடத்தில் நாயமார்களுக்கும் மாப்பிளைமார்களுக்கும் பிரபுவாகிய மஹாராஜன் கச்சேரிசெய்யும்படி சம்பவித்தது. ஆலப்புழையில் கடலோரத்தில் உயர்ந்தமரங்கள் கேட்பாரற்றுப் பரவிக்கிடக்க, மேற்சொன்னவிதமாய்ப் பப்ளிக் ஆபீஸுகளைக் கட்டினது ஆச்சரியமாயிருக்கிறது.

ரெயில்வே கம்பேனியார் இங்கிலாந்து தேசத்தில் செய்து வருவதுபோலவே இத்தேசத்திலும் கட்டடவேலைகளுக்கு அததற்குத் தகுந்தபடி உறுதியான சாமான்களைச் சரியாய் உபயோகப்படுத்திக்கொண்டு வருவதாலும், சென்னபட்டணத்துக் கைத்தொழில் வித்தியார்த்திகளும் அவ்வாறே மிகுந்த ஆவலோடு முயல்கின்றதாலும், துரைத்தனத்தாரும் பப்ளிக் வொர்க்ஸ் டிபார்ட்மெண்டாரைக்கொண்டு சிரேஷ்டமான செங்கல் முதலியவற்றைச் சூளைபோடுவதற்காகக் காளவாயைக் கட்டுவித்துக்கொண்டிருப்பதினாலும், இனி பப்ளிக் கட்டடங்களில் சுண்ணாம்பின் கொடுமை தீர்ந்துபோமென்று நினைக்கிறோம்.

நாம் இனிக் கட்டடங்கள் கட்டவேண்டிய மாதிரியைப் பற்றி ஆலோசிப்போம். இத்தேசத்தில் பிரகிருதத்தில் நான்கு வித தோரணையுள்ள கட்டடங்கள் உண்டு. அவை ஹிந்த அல்லது ஆரிய மாதிரி, மகம்மதிய மாதிரி, ஐரோப்பி ஆதிகால மாதிரி, ஐரோப்பிய மத்தியகால மாதிரிகளாம். வகையான இம்மாதிரிக் கட்டடங்களின் தாரதம்மியத்தைக் குறித்து யோசிக்கவேண்டியது அவசியம்.

பூர்வத்தில் நாகரிகமடைந்திருந்த ஜனங்களுடைய கட்டடங்களில் சிறப்புக்குரிய லட்சணங்கள் முற்றிலுமில்லாத கட்டடங்கள் கிடையா. ஆரிய மாதிரிக் கட்டடத்தை ஒப்புக்கொள்ளாமலும், அவைகளின் அலங்காரங்களை வியக்காமலும் இருப்பவர்கள்கூட அவைகளில் விசேஷமான கட்டடங்களை வெகு விருப்பத்தோடும் மதிப்போடும் கவனியாமற் போகார்கள். யாத்திரை போகிறவன் தேவ ஆலயத்திற்குச் சமீபத்தில் சேருமுன்னமே வழிநடையினாலுண்டான தேகசிரமத்தினால் மெள்ளமெள்ள அயர்ந்து நடக்கும்போது, அவன் பார்வையானது சுற்றியிருக்கும் மற்றெல்லாவஸ்துக்களிலும் உயர்ந்துநிற்கும் கெம்பீரமுள்ள உன்னதமான கோபுரங்களின்மீது செல்லுகின்றது. சமீபத்தில் போகப்போக ஆலயத்திற்கு வெளிப்புறத்தில் ஜனங்கள் நிறைந்த மண்டபங்களையும், பக்கத்தில் புண்ணிய தீர்த்தங்களையும், அலங்காரமான படித்துறைகளையும், அழன்று சுழன்று வருவோர்க்கு இன்பமான நிழலைத்தரத் தழைத்த நீண்ட அரசமரங்களையும் காண்கிறான். கோபுரவாசலானது அகன்று உயர்ந்து ஒன்றுக்கும் அசையாதவிதமாய்ப் பெருத்த ஆகிருதியோடு விளங்குகின்றது. ஆலயத்திற்குட் பிரவேசிக்கும்போது எங்கும் மண்டபப்பிராகாரங்கள், குளங்கள், இவற்றிற்கு அளவின்றி உபயோகப்படுத்தியிருக்கும் பிரம்மாண்டமான கற்கள், அங்கங்கு செய்திருக்கும் நுண்ணிய சித்திரவேலைகள், கெர்ப்பகிரகத்தின் இருண்ட தோற்றம் இவை யாவையும் ஆலயத்தின் அதிசயத்தையும், மகிமையையும், பழமையையும், மானிட உழைப்பையும், பக்தியையும் ருசிப்பிக்கின்றன. இவ்வாறு இத்தேசத்துத் தேவாலயங்கள் கெம்பீரமாயிருப்பதுமாத்திரமல்ல, கவிவாணருடைய வர்ணனைக்குக்கூட ஏற்றனவா
ருந்தபோதிலும், சாஸ்திரரீதியாய்ப் பார்க்குமளவில் அவை
குறைவுள்ளவைகளே. அக்கட்டடங்களின் முக்கிய
சணம் நீளவாட்டாய்க் கட்டியிருப்பதேயாம். சுவர் அல்
தூணின்மேல் உத்திரமும், அவ்வுத்திரத்தின்மேல் நாரி
ாட்டிக் கட்டியிருக்கிறார்கள். கட்டடம் உயர்ந்திருக்

கவேண்டுமானால் ஒரு நிலையின்மேல் மற்றொரு நிலையாகப் போகப்போகக் குறுக்கிக் கட்டுகிறது வழக்கம். இவ்விதமாய்க் கட்டிடத்திலுண்டாயிருக்கும் குறைவை வெளிப்புறத்தில் செய்யும் அலங்காரத்தினால் சமர்த்தாய் மறைத்து, கட்டடத்தைப் பார்வைக்குத் தொடர்ச்சியாயும் அழகாயும் தோன்றும்படி செய்தபோதிலும், அதிலுள்ள முக்கியக் குறைகள் தெரியாமற்போகா. இத்தேசத்தின் தக்ஷிணபாகத்திலுள்ள தேவாலயங்களின் முக்கிய லக்ஷணங்களெவையெனில், நெருக்கமாய்த் தூண்களை நிறுத்தி, அவைகளின்மேல் தட்டையாய்க் கற்களைப் பாவுவதினாலுண்டாகும் குறுகிய இடைவெளிகளும், நாற்சதுரமான வாசல்களும், அழிவற்ற எண்ணிறந்த சாமான்களும், நுண்ணிய சித்திர வேலைகளால் மறைக்கப்பட்ட லோபங்களுமேயாம். வட இந்தியாவிலுள்ள கட்டடங்களின் மேற்பாகங்கள் வளைவுவளைவாயும், சிலது கும்மட்டமாயும் இருக்கின்றன. பூர்வத்தில் ஜெயின, பௌத்த சிற்பிகள் கைத்தொழிற் சாஸ்திரமுறைமைப்படி கும்மட்டங்கள் கட்டும் விதத்தை அறிந்திருந்தார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. ஆனால் இந்த விஸ்தாரமான தேசத்தின் பற்பல பாகங்களில் பற்பல காலத்திலுண்டாயிருந்த கட்டடங்களின் பற்பல மாதிரிகளை இப்பொழுது ஆராய்ச்சி செய்யவேண்டுமென்பது எனது கருத்தல்ல. கமான் வளைப்பதும், கும்மட்டமாய்க் கட்டுவதும் ஹிந்து சிற்பமுறைமைக்கு ஒத்ததல்லவென்பதையும், அவ்வகைக் கட்டடங்களை அநேக வருஷகாலமாய் பிராமணர்கள் கட்டவில்லையென்பதையும் பிரத்தியக்ஷமாய்க் காண்கிறோம். கட்டடங்களில் கமான் வளைக்கத் தொடங்கினதுமுதல் சேர்ந்தபடி சாமான்களை உபயோகிக்க வேண்டிய அவசியம் ஒழிந்துபோயிற்று. கமான் வளைவும் கும்மட்டமும் [illegible]இருக்க அழகாயும், சாஸ்திரத்துக்கு ஒத்தவைகளாயுமிருப்பதுமன்றி, அதிக செலவில்லாமல் முடியத்தக்கவை வாயும் இருக்கின்றன. விசாலமான இடங்களை மூட வேண்[illegible] மானாலும், இக்காலத்தில் தொழிற்துறை காரியங்களுக்கு ஏ[illegible] படி கட்டவேண்டுமானாலும், அவற்றிற்கெல்லாம் இவ்

கைக் கட்டடங்களே தகுந்தவைகள். ஹிந்துக் கட்டடங்க
ளின் குறைகளையும், அவற்றில் விளங்கும் சித்திரவேலைக
ளி[ன்] ஆதிக்கத்தையும் யோசிக்குமிடத்து, அந்தக் கட்டடங்
கள் பிரகிருத துரைத்தனத்தில் ராஜகாரியங்களுக்கு உதவா
தவைகளென்றும், ஜனங்களின் பொதுக்காரியங்களுக்கும்
தகுந்தவைகளல்லவென்றும் சொல்லவேண்டும். ஆனால்
இக்காரணத்தினால் புது மாதிரிகளைக் கைக்கொண்டு புராதன
மாதிரி ஒன்றுக்கும் உதவாததுபோல இகழ்ந்து தள்ளிவருகி
றார்களே, அது சரியோ? எவ்வளவேனும் சரியல்ல. சாதா
ரணமான கட்டடங்களை ஜனங்களுடைய சௌக்கியத்துக்
கேற்றபடி ஹிந்து சிற்பசாஸ்திர ரீதியாகவே கட்டுவதில் அ
திக பிரயோஜனமுண்டு. குடியிருப்புக்கு வேண்டிய கட்ட
டங்கள் அந்தந்தத் தேசாசாரங்களையும், காலதேச வர்த்தமா
னங்களையும் விளக்கத்தக்கனவாயிருக்கவேண்டும். ஹிந்துக்க
ளுடைய பழைய மாதிரிக் கட்டடங்கள் ஏகாந்தமாயும், குளி
ர்ச்சியாயுமிருப்பதற்கு ஒத்தபடி கட்டியிருக்கின்றன. அக்
கட்டடங்களில் ஸ்திரீகள் தனித்து ஸ்வஸ்தமாய் இதரர் கண்
ணிற்படாமல் தங்கள் வேலைகளைச் செய்துகொண்டிருப்பதற்
கும், புருஷர் நாடோறும் வேலைமுடிந்து வீடுசேர்ந்தபின்பு
அமைதலாய் இளைப்பாறுவதற்கும், ராஜாங்கத்தாருடைய தொ
ந்தரவினின்று மறைந்திருப்பதற்கும், ஆண் பெண் யாவருக்
கும் வெயில் தாங்காமலிருப்பதற்கும் தகுந்த இடங்கள் ஏற்
பட்டிருக்கின்றன. இக்கட்டடங்கள் முக்கியாம்சங்களில்
இத்தாலி தேசத்தில் பூமிக்குள் அமிழ்ந்து, பின்பு கண்டுபிடிக்
கப்பட்டிருக்கிற பூர்விகக் கட்டடங்கள்போலவும், தமஸ்கு
பட்டணத்தில் நாம் கண்டு வியக்கும் கட்டடங்கள்போலவும்
இருக்கின்றன. வெளிப்புறத்தில் சுவரில் [சி]ல ஜன்னல்கள்
தவிர சாதாரணமாய் வேறொன்றுமிருக்கிறதில்லை. ஆனால்
மத்காரமாய் வேலைசெய்யப்பட்ட கல் அ[ல்]லது மரத்தூண்
ளின்மேல் ஜனங்கள் நிழலுக்கு நிற்கும்படியாய் தாழ்
ரம் இறக்கியிருக்கிறதுண்டு. விசித்திரமாய் வேலைசெய்
பட்ட ஒடுக்கமான தலைவாசலைக் கடந்து உள்ளே பிரவே

சிக்கும்போது முதற்கட்டில் முற்றமும், அதைச் சுற்றித் தூண்கள் நிறுத்திய தொட்டிக்கட்டும், அதற்குள் பல அறைகளும், இரண்டாம் மூன்றும் கட்டுகளில் சமயல் சாப்பாடு முதலியவற்றிற்கு வேண்டிய இடங்களும் இருக்கின்றன. இவைகளிலெல்லாம் தொட்டிக்கட்டானது மனதைக் கவரத்தக்க விசேஷ அழகுள்ளதாயிருப்பதால், அதை இத்தேசச் சிற்பிகள் ஒருக்காலும் கைசோர விடக்கூடாததாயிருந்தும், இப்பொழுது அதைத்தான் உபேக்ஷித்துவருகிறார்கள். அக்கட்டானது இத்தேச ஜனங்களுடைய நடை உடை பாவனைக்கும், ஆபரணங்களுக்கும், விவசாயத்துக்கும், வீட்டுத் தட்டுமுட்டுகளுக்கும் மிகவும் இணங்கியிருக்கின்றது. தூண்கள், உத்திரங்கள், சித்திரக்கம்பிகள், பூரார்பலகைகள், கதவுகள், தளவரிசைகள் இவையனைத்தும் இத்தேசச் சிற்பசாஸ்திரிகளுக்கு மிகுந்த கொண்டாட்டமாயிருப்பதுமன்றி, அவை அச்சாஸ்திரத்தின் பூர்த்திக்கு நிதர்சனங்களாயும் இருக்கின்றன. தேவாலயங்களில் வழக்கமாய்ச் செய்துவரும் அந்தக்கேடான பிரதிமைவேலையை வீடுகளிற்காணுதல் அரிது. அதற்குப் பதிலாக வீடுகளில் இன்பமான சுவாசனையுள்ள விருட்சங்கள் வைத்துக் காப்பாற்றுகிறதுண்டு. மதுரை திருநெல்வேலி ஜில்லாக்களில் இம்மாதிரிவீடுகளை இன்னும் காணலாம். அவை அடக்கமான கட்டடங்களாயிருந்தாலும் மிகுந்த வேலைப்பாடுள்ளவைகளாயிருக்கின்றன. இவ்வாறு குடித்தனத்துக்குரிய பூர்வகாலத்து அடக்கமான கட்டடங்கள் மிகவும் இணக்கமாயும் மனதுக்கு இன்பமாயுமிருக்கும்போது, இக்காலத்தில் போதுமான சாதனங்களையும், பயிற்சிசெய்யப்பட்ட ரசஞானத்தையுமுடைய ஒருவனால் அம்மாதிரிக் கட்டடங்களை எவ்வளவு சிறப்பாய்ச் செய்து முடிக்கக்கூடாது? கட்டடத்துக்கு வேண்டிய சாமான்களைத் தெரிந்தெடுத்தும், சிரேஷ்டமான மாதிரிகளை ஆராய்ந்துபார்த்தும், கட்டடத்தின் பரிமாணத்தை விரிவாக்கியும் கட்டுவானாகில், அவ்விதக் கட்டடத்தை மிஞ்சின இவ்வுலகத்திலிராதென்று உறுதியாய்ச் சொல்லலாம். இத்

சத்திலில்லாத சாமான்களும் மாதிரிகளும் மற்றோரிடத்திலுண்டோ? இவ்வாறிருந்தும் பிரகிருதத்தில் இத்தேசத்தின் ஸ்திதியென்ன? இத்தேசஸ்தர்கள் நன்றாய்க் கற்றுணர்ந்து தனவந்தர்களானவுடனே தங்கள் முன்னோர்களுடைய சாஸ்திரங்களைக் கைவிட்டு, தாங்கள் அவ்விஷயத்தில் அந்நியருக்குக் கற்றுக்கொடுக்க வல்லவர்களாயிருந்தும் அந்த அந்நியர்களுடைய ரீதிகளையே அநுசரிக்கிறார்கள். இத்தேசத்தில் செல்வம் பெருகிக்கொண்டுவந்தும், இல்வாழ்க்கைக்குரிய சுகங்களை அநுபவிக்கவேண்டுமென்கிற நல்விருப்பமுண்டாயிருந்தும், இவ்விஷயத்தில் இத்தேசமெங்கும் உண்டாயிருக்கும் விவேகக்கேட்டையும் ஒழுங்கின்மையையும் பார்க்க விசனமுண்டாகிறது. ஹிந்து மாதிரிக் கட்டடத்தோடு ஐரோப்பிய மாதிரியைக் கலக்கிறதும், வரம்பின்றி ஒன்றோடொன்று சேர்த்துக் குழப்புகிறதும் வாடிக்கையாயிருக்கிறது. மெல்லிய கற்றூண்களை நிறுத்திக் கட்டப்பட்ட பூர்வமாதிரியுள்ள சாமானியமான முகப்பின்மேல் பெருத்த காரைத்தூண்களைக் கட்டி, இரேக்கைதேசத்திலுள்ள டோரிக் என்னுமாதிரியாக மேல்மெத்தை வைப்பது அபிவிர்த்தியாகிக்கொண்டுவருகிற சில ஜில்லாக்களில் வழக்கமாயிருக்கிறது. இப்படி ஒரு மாதிரியோடு வேறொரு மாதிரியைக் கலக்கிற பிணி சாமானிய ஜனங்களைமாத்திரமல்ல, உயர்ந்த அந்தஸ்துள்ளவர்களையும் பிடித்திருக்கின்றது. சிலநாளைக்குமுன்பு இத்தேசத்திலுள்ள ஒரு கனவானை நாட்டுப்புறத்திலுள்ள அவரது வீட்டில் போய்க் கண்டேன். அவர் பிறவிப்பேறு, செல்வப்பேறுகளுடன் அபூர்வ கம்பீரமும் மரியாதையுமுடையவர். அவரிடத்தில் விசேஷ பரிவாரங்களிருப்பதுமன்றி, அவர் பிராமணர்கள் விஷயத்திலும், மற்றச் சுதேசிகள் விஷயத்திலும் மிகுந்த உதாரமுள்ளவராயும் இருக்கிறதுடன், ஐரோப்பியர்களை உபசரிப்பதற்காக ஒரு சிங்காரவனத்தில் நேர்த்தியான மாளிகையொன்றைக் கட்டியிருக்கிறார். என்னை அதிக மரியாதையோடும் பட்சத்தோடும் அவர் கனப்படுத்திய இடமாகிய ம் மாளிகையைக்குறித்து யான் குறை கூறினால் நன்றி

யற்றவனுயிருக்கிறேனென்று தோன்றும். ஆனல் வெண்மையாய் விளக்கும் தேவாலயங்களுக்கும், சத்திரங்களுக்கும், கலகலவென்றொலித்துக்கொண்டிருக்கும் பனைமரங்களுக்கும் இடையில் சுத்த வெள்ளைச் சுண்ணும்பினுற் பூசப்பட்டு, சுதேச மாதிரிக்குறிகள் யாதொன்றுமில்லாமல் முற்றிலும் ஐரோப்பிய மாதிரியாகப் புதிதாய்க் கட்டப்பட்ட அந்த மாளிகையைப் பார்க்கும்போது எனக்கு விசனப்படாமலிருக்கக்கூடவில்லை.

பஞ்ச வியாபாரத்தில் திரவியத்தைச் சம்பாதித்துப் புதிதாய் வீடுகட்டவேண்டுமென்கிற எண்ணங்கொண்டிருக்கிற இத்தேசத்துக் கனவான் இச்சபையில் யாராவது இருக்கலாம்; அப்படியிருந்தால் அவர் அவ்வீட்டை இக்காலத்து மாதிரிப்படி கட்டத்தொடங்குவதற்குமுன், நான் சொல்வதைச் சற்றுக் கேட்கும்படி அவரை வேண்டிக்கொள்ளுகிறேன். நான் சொல்வதாவது: இப்பட்டணத்துக் கொல்லத்துக்காரனை நீக்கி, உங்கள் முன்னோர் சம்பிரதாயம் இன்னும் ஒழிந்துபோகாதிருக்கும் வெளிநாட்டிலிருந்து வேலைக்காரனைத் தருவித்து உங்கள் தேசாசாரத்துக்கொத்தவிதமாய்க் கட்டுங்கள். அவ்வீடு உங்கள் பூர்வாசாரத்துக்கு ஒத்திருப்பதுடன் அமரிக்கையும், நீதியும், கல்வியும் விளங்கும் இக்காலத்தில் உண்டாயிருக்கிற நெறியுள்ள அரசாட்சியின்கீழ் இத்தேச கனவான்கள் ஸ்வாதந்திரியத்தோடும் பயமின்மையோடும் வசிப்பதற்குத் தகுந்தபடியாயும் இருக்கவேண்டும். பெரும்பாலும் பழைய மாதிரியைப்போலக் கட்டுவதில் முக்கியமாய் முற்றம், தூண் இவைகளை நீக்கிவிடாமல், இத்தேசத்துக் கொத்துவேலை, சித்திரவேலை முதலியவைகளில் சிரேஷ்டமானவைகளை அநுசரித்து, வெளிப்பக்கங்களுக்குக் கைத்தொழிற்சாலையிலிருந்து மிகவும் உத்கிருஷ்டமான செங்கல்லையும், உட்பக்கத்த ஸ்தம்பங்களுக்கு மரங்களையும், வெளிப்பக்கத்துத் தூண்களுக்குக் கடப்பை தேசத்துக் கல்லுகளையும், தளங்களுக்கு வெட்டப்பட்ட கல்லுகளையும் உபயோகித்து, தூவாணம்பட இடங்களில் சுண்ணச்சாந்து பூசி, சித்திரங்களை எழுதி,

ணவில்லாத இடங்களில் இத்தேச சிற்பசாஸ்திரத்துக்குரிய நிகரற்ற பற்பல விசித்திர வேலைகளையும் செய்[illegible] கண்ணாடிச் சாளரங்களுக்குப் பூர்வ மாதிரியொன்றுமில்லாதிருந்தாலும், அவற்றை மற்ற கட்டட மாதிரிகளுக்கு இணங்கச் செய்துகொள்ளலாம். அப்படிச் செய்யும் வகையைக் கவர்ன்மென்ட் சிற்பியிடத்தில் தெரிந்துகொள்ளலாம். வீடு கட்டி முடிந்ததன்மேல் வேண்டிய இரத்தினகம்பளங்களை வேலூரிலிருந்தும், மற்றச் சாமான்களை மதுரை தஞ்சாவூர்களிலிருந்தும் தருவியுங்கள். ஹிந்து மாதிரி ஒத்துவராதவிடங்களில் மகம்மதிய மாதிரியை அநுசரியுங்கள். வீட்டுக்கு வேண்டிய சாமான் தட்டுமுட்டுகள் விசேஷமாய் ஐரோப்பிய மாதிரியாயிராமல் இத்தேசாசாரத்துக்கு இணங்கினபடி இருக்கவேண்டும். அதாவது: அவைகள் உயர்ந்தனவாயும், லேசாயும், காந்தியுள்ளவையாயும், விசாலமாயும் இருக்கவேண்டும். இவ்வாறு செய்துமுடித்தல் சுலபமல்லவென்றாலும் அசாத்தியமல்ல. அவ்விஷயத்தில் முயலுந்தோறும் அது எளிதாகும். இப்பொழுது நீங்கள் உபேட்சித்துவரும் ஸ்வதேசக் கைத்தொழிற் சாஸ்திரங்களை லண்டன் பாரிஸ் என்ற பட்டணங்களில் நன்றாய்க் கற்றுத் தேர்ந்த வித்துவான்கள்கூட அறிந்துகொள்ள விருப்பத்துடன் முயலுகிறார்களென்பதை நீங்கள் அறியவேண்டும். முன் பின் நடவாத ஒன்றை நான் செய்யச்சொல்லவில்லை. ஐரோப்பா கண்டத்தில் செய்ததைத்தான் உங்களையும் செய்யும்படி வேண்டிக்கொள்ளுகிறேன். இத்தேசத்தில் பூர்வத்திற் செழித்திருந்த கைத்தொழிற் சாஸ்திரங்களை நீங்கள் எவ்வாறு இக்காலத்தில் மறந்து இகழ்ந்து வருகிறீர்களோ, அவ்வாறே ஐரோப்பா கண்டத்திலும் பூர்விக தேசாசாரத்துக்கடுத்த நூல்களை இரண்டு நூற்றாண்டுக் காலவரையில் நாங்களும் மறந்து இகழ்ந்துவந்தோம். நீங்கள் இதுவரையிலும் எங்கள் பிழைகளைத் தொடர்ந்துவந்தது போதும். இனி அப்பிழைகளைச் சீர்ப்படுத்துவதில் எங்களைப்போல நடந்துகொள்ள வேண்டிக்கொள்ளுகிறேன். மைசூர் நாட்டின் இளவரசன் வசிப்பதற்காகப் பெங்களூரில் ஒரு சிறிய அரமனை

கட்டவேண்டியிருப்பதால், ஹிந்துக்களுடைய குடியிருப்புக் [illegible] சாஸ்திரத்தை மறுபடியும் தலையெடுக்கச் செய்வதற்கு நல்ல சமயம் வாய்த்திருக்கிறது. பூர்வம் ஹைடர் ஆலியால் ஹிந்து தருக்கமாதிரிகளை அநுசரித்துக் கட்டப்பட்டு, இப்பால் பழுதாய்ப்போயிருந்தாலும் மிகவும் அழகாயிருக்கிற தர்பார்ஹால் என்னும் கட்டடத்துக்கு அருகாமையில் அக்கட்டடத்தைக் கட்டுவார்களென்று நினைக்கிறேன். அதைக் கட்டி முடிப்பதற்கு வேண்டிய சாவகாசமிருக்கிறது; பணத்திற்கும் குறைவில்லை. அந்த வேலையை மேற்பார்த்துக்கொள்ளவேண்டிய அதிகாரிகளோ சகலவிதத்திலும் தேர்ச்சியுள்ளவர்களாகிய (Mr. Bowring) மேஸ்தர் பௌரிங், (Colonel Malleson) கர்னல் மாலிசன் என்பவர்கள்; இவ்விருவரும் ஆரமனை முதலிய கட்டடங்களில் தேர்ச்சியடைந்திருந்த வட இந்தியாவில் நெடுநாளிருந்து பழகினவர்களாதலால், இவர்கள் விசாரணையின்கீழ் மைசூரில் கட்டப்போகிற கட்டடத்தின் முடிவை அறிய ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன்.

மகம்மதியர் படையெடுத்துப்போய் வெற்றிபெறும் இடங்களிலெல்லாம் அவற்றை அழித்துப் பாழாக்குகிறது அவர்கள் வழக்கமென்று சாதாரணமாய்க் கூறுவது பழுதல்ல. ஒரு தேசத்தில் நிலைபெற்றிருக்கிற ராஜாங்க எற்பாடுகளை அழித்துப் பலாத்காரமாய் அதிகாரிகள் மாறும்போது, பலன்தருமுயற்சிக்கும் கல்விக்கும் சாஸ்திரங்களுக்கும் கேடுண்டாவது சஹஜமே. மகம்மதிய சமயத்தின் கோட்பாடுகளிலும், அச்சமயத்தை ஆதியில் அநுசரித்து வந்தவர்களுடைய அநுஷ்டிப்பிலும் மேற்காட்டிய விலக்கவொண்ணுக் கெடுதிகளை அதிகரிக்கப்பண்ணத்தகுந்த விஷயம் மிகுதியாயிருந்தது. மகம்மதியர் அந்நியருடைய உழைப்புப் பலனை அநியாயமாய் அபகரித்து ஜீவித்துவந்தார்களே தவிர, வேளாண்மைத்தொழிலை அப்பியசித்ததுமில்லை, பரிபாலித்ததுமில்லை. அவர்கள் தாங்கள் வெற்றிகொண்ட தேசங்களின் சாஸ்திரம், சரித்திரம் காவியம் முதலியவைகளை மதிக்காமல் விட்டதுமன்றி, அன்

களில் தாங்கள் அநுசரித்துக்கொண்ட சிலவற்றையுங்கூட
அபிவிர்த்தி செய்யாமலும்போனார்கள். தேவாலயங்கள் முத
லிய கட்டடங்களின்மேல் காணப்படும் பிரதிமைகளைக் கட
வுள் வழிபாட்டுக்காகச் செய்துவைத்திருப்பது போலக் கரு
துவது அவர்களுடைய சமய சித்தாந்தமாகையால், மானிட
வடிவம்போன்ற பிரதிமைகளைச் சித்திரவேலையிலாவது கொத்
துவேலையிலாவது, செய்யவொட்டாமல் தடுத்துவந்தார்கள்.
அப்படியிருந்தும் மகம்மதிய சமய வியாபகமானது முற்றும்
கெடுதிக்கு ஏதுகரமாகவில்லை. அரபியர்களுடைய தீட்
சண்ணிய புத்தியானது இவ்வாறு நாகரிக நூல்களில் பாதியை
விட்டு மற்ற பாதியின்மேல்மாத்திரம் நின்று, கடவுள் அரு
பியும் ஏகனுமாயிருக்கிறாரென்னும் மேலான சித்தாந்தத்தில்
அவர்களுக்குண்டாயிருக்கும் அபினிவேசத்தால் பின்னும்
அதிகக் கூர்மையடைந்து, மதசம்பந்தமான கட்டடங்களை
இவ்வுலகில் நிகரற்றவிதமாய் உண்டுபண்ணுவதில் முற்றும்
சென்றது. அவர்களுடைய மற்ற கட்டடங்களும் மதசம்
பந்தமான அக்கட்டடங்களுக்குத் தாழ்ந்தவைகளல்ல. தி
ரைத்தன மாறுதல்களிலும் போராட்டங்களிலும் ஈடுபட்டுச்
சலிக்காமல் நிலைநின்ற தேறின மகம்மதிய அரசர்களிற் பலர்
விசேஷ சமர்த்தர்களாயும் ரசஞர்களாயுமிருந்தார்களாதலால்,
சிற்பமுதலிய சாஸ்திரங்களும் அவர்களுடைய ராஜபோ
கங்களுக்கு உதவியாயிருந்தன. கவனகாவியங்களிலும், கீத
வாத்தியங்களிலும், சிங்காரவனங்களிலும் அவர்களுக்கு
அதிக உத்சாகமும் விருப்பமும் இருந்ததென்று சிலரு
டைய சரித்திரங்களால் தெரியவருகிறது. (Granada) கிரன
டா முதல் (Constantinople) கன்ஸ்டான்டிநோபில் வரை
யிலும், (Constantinople) கன்ஸ்டான்டிநோபில் முதல்
(Samarcand) சாமர்கான்ட் வரையிலும், (Samarcand)
சாமர்கான்ட் முதல் (Bejapore) பிஜப்பூர் வரையிலும் பூமி
யானது மகம்மதியருடைய தெய்வபக்தியையும் ரசஞத்
தையும் விளக்கும் நேர்த்தியான சிறந்த கட்டடங்களால் நி
றைந்திருக்கிறது. இவ்வளவு தூரம் வியக்கத்தக்கதாய் மகம்

மதியருக்குள் சிற்பநூல் தேர்ச்சிபெற்றதற்குக் காரணம் யா
தெனில், ...கியில் (Syria) சீரியா, (Egypt) ஈஜிப்ட்,
(Northern Africa) வட ஆபிரிக்கா, (Spain) ஸ்பெயின்,
(Asia Minor) ஏஷியா மைனர், (Byzantium) பைசான்டியம்
இத்தேசங்களில் பூர்விக ரோமர்களால் கட்டப்பட்ட கட்ட
டங்களில் பழுதடைந்துபோக மற்றப் பகுதிகள் நல்ல ஸ்தி
தியிலிருந்ததும், அக்காலத்தில் கிறிஸ்து சமயத்துக்கடுத்த நூதன
னமாதிரிக் கட்டடங்கள் அபிவிர்த்தியாகிக்கொண்டுவந்தது
மேயாம். இம்மாதிரி சில விஷயங்களில் நாகரிகமற்றதாயி
ருந்தாலும், அது பின்னிட்டு மிருந்த தேர்ச்சியடையத்தக்க
தன்மையுடையதாயிருந்தது. அம்மாதிரிக் கட்டடங்கள் அந்
நியமதஸ்தருடையவையானுலுஞ்சரி, கிறிஸ்துவ மாதிரியைத்
தொடர்ந்துவந்தவையானுலுஞ்சரி, அவற்றின் முக்கிய லட்ச
ணங்கள் கமான் வளைவும் கும்மட்டமுமாம். இவற்றை மகம்
மதியர் அநுசரித்து, அவற்றிற் பற்பல வேறுபாடுகளையுண்
டாக்கி, அவற்றிற்கு மேற்பாகத்தில் மீனாக் கட்டி, இவ்
வாறுகச் சிற்பசாஸ்திரத்துக்கடுத்த மாட்சிமையும் சிறப்பும்
அழகும் அமைந்தவிதமாய் கட்டட மாதிரிகளை நிருமித்
தார்கள். இம் மகம்மதிய மாதிரிகள் அழகாயும், சாஸ்திரோக்த
மாயும் இருப்பனவன்றியும், விசேஷமாய் உபயோகமுள்ள
வையாயும், வேண்டியபடி இசையத்தக்கவையாயும், அதிக
செலவில்லாமல் முடியக்கூடியவையாயும் இருக்கின்றன.

மகம்மதிய கட்டடங்கள் விசேஷ சித்திரவேலை செய்வ
தற்கு இடங்கொடுக்கத்தக்கவைகளாயிருந்தாலும், அப்படிச்
செய்வது அவற்றிற்கு அநாவசியகமாயிருக்கின்றது. ஏனெ
னில் கட்டடத்தின் ஆகிருதி எடுப்பாயும், சமவிபூக்தாங்க
மாயும் இருப்பதால், அவ்வாகிருதியே பார்வைக்குத் திருப்தி
யை உண்டாக்குகிறது. ஹிந்துதேச கிரீக்தேசக் கட்டடங்
கள் விசேஷ பிரதிமைமுதலிய சித்திரவேலைகளில்லாவிடி
ல் பார்வைக்குக் கேவலமாயும் மொட்டையாயும் இருப்பதா
ல் அவைகளுக்குச் சித்திரவேலை அவசியமாயிருக்கின்
றது. க்கமாதிரிக் கட்டடங்களோ அவற்றின் அங்கங்

இணைந்திருக்கும் விதத்தினாலேயே அவை இயற்கையாய் இன்பத்தைத் தரத்தக்கவைகளாயிருக்கின்றன. அவைவ விசேஷ சித்திரவேலையை அபேக்ஷியாமலிருக்கிறதுமாத்திரமல்ல, சாமான்களையும் அதிகமாய்க் கொள்ளுகிறதில்லை. ஸ்தம்பங்களின்பேரில் உத்திரங்களைப் பாவி, நீட்டுவாக்காய்க் கட்டும் கட்டடங்களில் ஸ்தம்பங்கள் ஒன்றுக்கொன்று தூரமாயும், மூடவேண்டிய இடைவெளிகள் விஸ்தாரமாயும் இருக்கும் பட்சத்தில், அதிக விலைபெற்ற கனத்த சாமான்களை மிகுதியாய் உபயோகிக்கவேண்டி நேரிடுகிறது. கமான்வளைத்துக் கும்மட்டமாய்க் கட்டும் கட்டடங்களிலோவெனில் ஒவ்வொரு பாகமும் சிறிதாயும் [illegible]யமாய் முடியத்தக்கதாயும் இருப்பதால், அவைகள் ஒன்றுடன் இணையும்போது குறைந்த செலவில் மிகுந்த இடத்தை மூடத்தக்கவையாயிருக்கின்றன. மேலும் இந்தத் துருக்கமாதிரிக் கட்டடங்களை எத்தன்மையான நியமத்துக்கும் எளிதில் இணங்கச்செய்துகொள்ளலாம். ஆதிகாலத்தில் மதசம்பந்தமான காரியங்களுக்குரிய மசீது, சாவடி, கோரி முதலியவைகளுக்கு இசைந்திருந்த அம்மாதிரிக் கட்டடங்களானவை வீடுகள், திவான்கானாக்கள், வேடிக்கைச்சாலைகள், ரெயில்வே ஸ்டேஷன்கள், பண்டசாலைகள், நடனசாலைகள் முதலிய நாகரிகமுள்ள இக்காலத்துக்கு வேண்டிய கட்டடங்களுக்கும் இசைந்திருக்கின்றன. இந்தத் துருக்கமாதிரி முக்கியமாய் இத்தேசத்தில் இரும்புக்கட்டடங்களுக்கும் இசைந்திருக்கின்றது. இரும்புக்கட்டடத்துக்கு இணங்கிய கமான்வளைவும் கும்மட்டமும் துருக்கமாதிரிக் கடுத்திருக்கிறதுபோலவே, ரோமர் முதலிய இதரமாதிரிகளுக்கும் அடுத்திருக்கின்றனவென்பது வாஸ்தவமே. ஆனால் ரோமர் மாதிரிக்கட்டடங்கள் மிகுந்த பளுவாயிருப்பதால் இரும்புவேலைக்கு இசைந்தனவல்ல. அல்லாமலும் ரோமர் மாதிரியானது துருக்கமாதிரியைப்போலத் தட்டிகள் இர[illegible]கிகள் முதலிய அலங்காரவேலைகளுக்கு இசைந்ததல்ல.

துருக்கமாதிரிக் கட்டடங்களுக்குரிய லட்சணங்களுக்குள் அக்கட்டடங்களானவை தோட்டங்கள் விருட்சங்கள்

முதலிய இயற்கைக் காட்சிகளோடு இணைந்திருக்குந் தன்மையாந்து மனதைக் கவரத்தக்க முக்கிய லட்சணமாயிருக்கின்றது. நான் இவ்வாறு கூறுவதை வீண் மானவிக வியாபாரமாகக் கொள்ளக்கூடாது, விதம்விதமாய்ப் பாத்திகள் பிடித்து, ஒழுங்காய்ப் பூஞ்செடிகள் வைத்திருக்கிற பூந்தோட்டமும், ஓங்கிவளரும் சைப்பிரஸ் என்னும் தமால விருட்சமும், தழைந்து வளரும் பிளேன் என்னும் விருட்சமும் அக்கட்டடத்தின் சவுத்துக்கும், அதிலுள்ள (Minaret) மினர் கும்மட்டங்களுக்கும் பிரதியாய் விளங்குகின்றன. வேகமாய் ஓடும் பாஸ்வரஸ் என்னும் நதியருகிலாவது, பித்தினியா நாட்டிலுள்ள ஒலிம்பஸ் என்ற மலையின் சார்பிலாவது, காலிப் என்ற அரசர்களுடைய சமாதிகளிருக்கும் காயிரோவென்ற பட்டணத்திலாவது, யமுனாநதிக்கருகில் ஓர் சிகரற்ற கவிகையின்கீழ் ஷாஜஹான் என்னும் சக்கரவர்த்தியின் உடலும், மூம்டா ஜமஹால் என்ற கோரியும் இருக்கப்பட்ட இடத்திலாவது விளங்குகின்ற கட்டடங்களுக்கும், அவற்றைச் சூழ்ந்திருக்கும் இயற்கைக் காட்சிகளுக்குமுள்ள இணக்கத்தை எல்லாரும் போய்ப்பார்த்து வியக்கமுடியாது. ஆனால் ஸ்ரீரங்கபட்டணத்திலுள்ள நேர்த்தியான சிங்காரவனத்தையும், வேலூர்ப்பட்டணத்தின் கன்மலையினடிவாரத்தில் கொரான் வேதத்தைப் படிப்பதாலுண்டாகும் மிணுமிணென்ற சப்தத்தோடும், தடாகத்திலுள்ள ஜலஜலவென்னும் தொனியோடும் கூடிய புளியமரம் பனைமரங்கள் நிறைந்த நிச்சப்தமான தோப்புகளையும் போய்ப்பார்ப்பது எல்லாருக்கும் எளிதல்லவோ? அவ்விடங்களிற் போய்ப் பார்ப்பாராயின் மகம்மதிய சிற்பிகள் இயற்கையையும் செயற்கையையும் தெய்வபக்தியோடும் மரணக்குறியோடும் இசைத்து இணங்கச்செய்திருக்கும் சமத்காரத்தைக் காண்பார்கள்.

(Fergusson) பெர்கஸன் என்பவர் சிலநாளுக்குமுன் செய்த பிரசங்கத்தில் ஹிந்து மகம்மதிய சிற்பசாஸ்திரங்களுக்குரிய மாதிரிகள் இல்வாழ்க்கைக்குரிய கட்டடங்களை வெகு திறமாயிணைக்கப்பட்டிருக்கின்றனவென்று செ

யிருக்கிறார். இச்சேர்க்கை சிலவேளைகளில் ஹிந்து சிற்பிகள் மகம்மதிய மாதிரிகளை அநுசரித்ததாலும், சிலவேளைகளில் மகம்மதிய அரசர் ஹிந்து சிற்பிகளைக்கொண்டு கட்டடவேலைகளைச் செய்வித்ததாலும் உண்டாயிற்று. ஹிந்து சிற்பிகள் மகம்மதிய மாதிரிகளை அநுசரித்தார்களென்பதற்கு நேர்த்தியான திருஷ்டாந்தங்களை விஜயநகரத்திற் காணலாம். துங்கபத்திரா தீரத்திலுள்ள தெலுங்கநாட்டுக்கு ராஜதானியாகிய அவ் விஜயநகரத்திலிருந்து சிற்பவித்தையை நாயக்கமார் மதுரைக்குக் கொண்டுவந்தபடியால் அந்நகரத்திலும் அவ்வித திருஷ்டாந்தங்களைக் காணலாம். மகம்மதிய அரசர் ஹிந்து சிற்பசாஸ்திரத்தை அநுசரித்தார்களென்பதற்கோ பேபர் சக்கரவர்த்தியின் வம்சத்திற்றோன்றி அரசாண்ட சக்கரவர்த்திகளால் பிந்தியகாலத்தில் கட்டுவிக்கப்பட்ட + எண்ணிறந்த கட்டடங்கள் திருஷ்டாந்தங்களாம். அக்பர், ஷாஜஹான் என்ற சக்கரவர்த்திகள் ராஜ்ஜியபரிபாலனஞ்செய்துவந்தகாலத்தில், அவர்கள் ஹிந்துக்களுக்கும் மகம்மதியருக்கும் கொஞ்சக்காலவரையில் ராஜகாரியங்களிலும் மற்ற விஷயங்களிலும் பரஸ்பராநுகூலியத்தை உண்டாக்கியிருந்தது போல, அவ்விருசமயத்தாருடைய சிற்பசாஸ்திரங்களுக்கும் ஐக்கியத்தையுண்டாக்க யத்தனப்பட்டதாகத் தோன்றுகிறது. இத்தன்மையான கலப்புக் கட்டடங்கள் உபயோகமாயும் அழகிற் சிறந்தனவாயுமிருந்தாலும், இவ்வாறு ஒன்றோடொன்று கலப்பது சிலாக்கியமல்ல. ஹிந்துக்களும் மகம்மதியரும் ஐரோப்பியருடைய மாதிரியை அநுசரிப்பதைப்பார்க்கிலும் அவர்கள் தங்களுக்குள் ஒருவர் மாதிரியை ஒருவர் அநுஷ்டிப்பதில் அவ்வளவு தோஷமில்லை. மேலும் ஹிந்துக்கள் ஏகதேசம் துருக்கமாதிரிக்கடுத்த வளைவைத் தங்கள் சித்திரவேலைப்பாடுகளுடன் இணைத்துக் கட்டினாலும் கட்டலாம். மகம்மதியர்மட்டும் வேறெந்த மாதிரிகளையும் ஒருபோதும் அநுசரிக்கக்கூடாது. ஏனெனில் அவர்களுடைய கட்டட மாதிரி தேர்ச்சியுள்ளதாதலால் அதை மற்றொரு மாதிரியுடன் சேர்க்கும்போது இழிவுபடுமேயல்லாமல் வேறல்ல. மை

ஞர் நாட்டிலும் கர்நாடக தேசத்திலும் துருக்கமாதிரி மிகவும் கேடடைந்திருக்கிறது. சீரங்கபட்டணத்தில் ஹிந்து மாதிரித் தூணணியின்மீது மகம்மதிய மாதிரியாய்க் கும்மட்டம் கட்டியிருப்பதைக் காணலாம். வாலாஜாபேட்டையில் சில நாளுக்குமுன் கட்டப்பட்ட மசிதைச் சுற்றிலும் ஹிந்து மாதிரியை அநுசரித்துக் கட்டியிருக்க, முகப்பு அல்லது முன் பார்வையிலுள்ள பாகமானது ஹிந்துக்களுடைய புராதன மண்டபத்துடன் துருக்கருடைய மினார் முதலிய ஸ்தம்பங்களைச் சேர்த்துக் கட்டப்பட்டிருக்கின்றது. இவ்வித ஆபாசத்தைச் சென்னபட்டணத்திலும் காணலாம். திருவல்லிக்கேணியில் இந்நூற்றாண்டின் துவக்கத்தில் கட்டப்பட்ட ஒரு அழகான கோரியிருக்கிறது; இக்கோரி ரோமர்மாதிரிக்கடுத்த தூண்களோடு ஹிந்து மாதிரிக்குரிய வேலைப்பாட்டையும் சேர்த்து, வெளிப்பார்வைக்குத் துருக்கமாதிரியை அநுசரித்துக் கட்டினதுபோற் றோன்றும்படி செய்திருக்கிறது. திருவல்லிக்கேணியிலுள்ள பெரிய மசிதை சிரேஷ்டமான சாமான்களைக்கொண்டு வேறொரு கலப்பின்றி ஸ்வச்சமாய்த் துருக்கமாதிரியாகவே கட்டியிருப்பதால், அது க்ஷீணித்துப்போகும் ஒரு நூலை அப்படிப் போகவிடாமல் தடுப்பதற்குண்டான ஓர் தடைபோலவும், இக்காலத்திலுள்ள சிற்பசாஸ்திரத்தின் இழிவைப் பழிக்கிறதுபோலவும் விளங்குகிறது. ஹிந்துக்களுக்கு யான் சொல்லியவாறே, நல்ல ரசஞானத்தையும் கல்வித்தேர்ச்சியையும் அவாவிநிற்கும் மகம்மதிய வாலிபருக்கும் சொல்லுகிறேன். உங்கள் முன்னோர்களுடைய இருத்தியங்களை மதியுங்கள், பேணுங்கள், அவைகளைப் பயின்று அவற்றைப்போற் செய்ய முயலுங்கள். இதனால் அவற்றை அடிமைபோலப் பின்பற்றவேண்டுமென்றல்ல, அவற்றின் சுபாவத்தன்மையைச் சோரவிடாமல் காலதேச வர்த்தமானங்களுக்கு இணங்கச்செய்து, விவேகத்தோடு அநுஷ்டிக்கவேண்டுமென்பதேயாம்.

சாதாரணமாய் உத்தியோகத்திற்கடுத்த கட்டடங்களை மகம்மதிய மாதிரியாய்க் கட்டுவதைக்குறித்து இந்திய துரைத்த

தார் ஆலோசிக்கவேண்டும். இங்கிலிஷ் கொற்றர்களும் தமிழ்க் கொற்றர்களும் அவைகளை எளிதில் கற்றுக்கொள்ளலாம். அவை கொஞ்சக்கால அநுபவத்தின்மேல் இப்போதுள்ள மாதிரிக் கட்டடங்களைக்காட்டிலும் குறைந்த செலவில் முடியக்கூடியவையாயும், நிழல், குளிர்ச்சி, காற்றோட்டம், சௌக்கியம், அழகு இவைகளிற் சிறந்தவைகளாயும் காணப்படும். இச்சென்னை மாநகரத் துரைத்தனத்தார் ரெவினியுபோர்ட் ஆபீசுக் கட்டடத்தைப் பெரியதாக்கிச் சீர்ப்படுத்துவதில் அதிக சமர்த்தரான ஒரு சிற்பியின் யோசனைப்படி மகம்மதிய மாதிரியைத் தற்கால உபயோகத்துக்கு இணங்கச்செய்து கட்டிவருகிறார்கள். அக்கட்டடத்தில் உபயோகித்துவருகிற சாமான்கள் சிரேஷ்டமானவையல்லவென்றும், தகுந்த சாமான்கள் அகப்படாததினாலே அவைகளை உபயோகிக்கும்படி நேரிட்டதென்றும் அச்சிற்பியாகிய சிசஹோம் என்பவருக்கே தெரியும். இவ்வாறு சாமான்கள் தகுதியானவைகளல்லவென்றாலும், அவர் இசைத்திருக்கும் கட்டடத்தின் மாதிரி நான் வெளியிட்டிருக்கிற அபிப்பிராயங்களுக்கு ஒத்திருக்கின்றது. இதனால் அவர் பூர்வகாலத்துச் சிற்பசாஸ்திரத்தின் மேன்மையை வெளிப்படையாய்த் தெரியப்படுத்தினவரானார். இவ்விதமாய் அவர் இத்தேசத்தின் சிற்பநூலை மறுபடியும் உயிர்ப்பிக்கக் கருதி, அவர் செய்த இப்பிரயத்தனம் மதிக்கப்படாமலும் மேலுமேலும் பலன்படாமலும் போகாதென்று கோருகிறேன்.

115352

இனி இத்தேசத்தில் அங்கிலேயர் தங்கள் தேசமாதிரியாய்க் கட்டியிருக்கிற கட்டடங்களைக்குறித்துப் பேசுவோம். அக்கட்டடங்கள் அவர்கள் சுதேசத்தில் சிற்பநூல் இன்ன நிலைமையில் இருக்கிறதென்பதை யுணர்த்துகின்றன.

சாஸ்திரிகமாய் நோக்குங்கால் ஒன்றோடொன்று பொருந்தாத கட்டட மாதிரிகளை ஏககாலத்தில் உபயோகப்படுத்துவதாவது, அல்லது ஒரு தன்மையான பழைய மாதிரிக் கட்டடங்களோடு வேறொரு தன்மையான புதியமாதிரிகளை நடு

வாக்தாரத்தில் சேர்த்துத் தொடர்நிலையாய்க் கட்டுவதாவது யுக்
தமன்று. இம்மாதிரிக் கட்டடங்களுக்குப் பிரசித்தமான
திருஷ்டாந்தங்களை அங்கிலேய பட்டணங்களில் காணலாம்.
சாதாரணமாய்க் குடியிருப்புக் கட்டடத்துக்காக ஒரு மாதிரி
யும், பொதுக் கட்டடங்களுக்கும் கோவில் முதலியவைகளு
க்கும் வேறொரு மாதிரியும் அங்கே வழங்கிவருகின்றன.
அப்பட்டணங்களில் சாதாரணமாய்க் கட்டியிருக்கிற வீட்டு
வரிசைகளுக்கு இடையில் நூதன மாதிரியான வீடுகளை நுழை
த்துச் சிலவிடங்களில் கட்டியிருப்பதுமுண்டு. குடியிருப்பு
வீடுகளையும், (Gothic) காதிக் மாதிரியை அநுசரித்துக் கட்டிய
கோவில்களையும், அங்கங்கே (Classical) ஆதிகால மாதிரிக்
கட்டடங்களுக்கு இடையில் (Mèdiaval) மத்தியகால மாதி
ரிக் கட்டடங்களையும் காணலாம். நேர்கிரையும் எறுகிரையு
மான வீடுகள் இவ்வாறு இங்கிலாந்துதேசத்துத் தெருக்களி
லும் சதுர்க்கோணங்களிலும் பார்ப்பவர் நேத்திரம் வெறுக்
கும்படியாய்க் கட்டப்பட்டிருக்கின்றன. சித்திரவேலைக
ளும் நண்ணியவேலைகளும் பற்பல மாதிரியாயிராமல் ஒன்
றோடொன்று ஒவ்வாதனவாயிருக்கின்றன. (Classical) ஆதி
கால மாதிரிகளைத் தங்கள் மனம்போனபடியெல்லாம் அநு
சரித்துக் கட்டியிருப்பதால், அங்குள்ள கட்டடங்கள் வே
றொன்றைப்பார்த்து எசுர்தியாய்க் கட்டப்பட்டவைகள்போ
லிருக்கின்றனவேதவிர, அந்தந்தக் காலத்தில் ஜனங்களுடைய
ஆவசியகத்துக்கும் விவேகத்துக்கும் ஒத்தபடி கட்டினவைக
ளாக இருக்கவில்லை. அதனால் அவர்களுடைய சிற்பநூலான
து ஜனங்கள் அபிவிர்த்திக்குத்தக்கதாக அவர்களுக்கு வேண்
டியபடியெல்லாம் விர்த்தியாகிறதற்கு ஏதுவில்லாமல் தடை
பட்டுப்போயிருக்கிறது; இது மிகவும் துக்கத்துக்கேதுவாயிரு
க்கிறது. ஏனெனில் (Gothic) காதிக் மாதிரிக் கட்டடத்துக்
குப் பதிலாக (Classical) கிளாசிகல் அல்லது ஆதிகால மாதி
ரியை அநுசரிப்பதற்கு முந்தி எங்கள் தேசத்தில் பூர்விகமா
யுண்டாயிருந்த அங்கிலேய மாதிரியானது தேவாலயங்களுக்
கும் மற்றக் கட்டடங்களுக்கும் இசைந்ததாயிருந்ததுமன்றி,

இக்காலத்து வித்தியமானத்துக்குமேற்றபடி இணங்கத்தக்கதாயும், பார்வைக்கு ஒரே மாதிரியாயிராமல் பலவகையாயும் விசித்திரமாயும் தோன்றத்தக்கதாயுமிருந்தது. ஐரோப்பா கண்டத்தின் வடபாகத்திலுள்ள சாதியாரனைவருக்கும் ஒரே மாதிரியான கட்டடம் போதுமானதாயிருக்கிறது. ஏனெனில் அவர்களெல்லாரும் வாஸ்தவத்தில் ஒரே சமயத்தையும், ஒரேவகையின நெறிநியமங்களையும், ஒரே தன்மையான பூமியையும், ஒரே மாதிரியான ஆசாரங்களையும் உடையவர்களாதலால், கருங்கல், செங்கல், மரம், ஜனங்களுடைய நேர் நிருவாகம் இவை முதலிய காரணங்களினால் உண்டாகிற சொற்பபேதங்கள்தவிர, கட்டட மாதிரியில் வேறுபேதப் படவேண்டிய அவசியமில்லை. இங்கிலாந்தில் பிரகிருதத்திலுண்டாயிருக்கும் தாறுமாறான ஸ்திதியைக்குறித்துத் துக்கிக்கலாமேதவிர அதைச் சீர்திருத்துவது அவ்வளவு எளிதல்ல. இந்நிலை எவ்வாறு முடியுமோவென்பதையும், இப்பொழுதுண்டாயிருக்கும் குழப்பத்தினின்றும் ஒரு நூதன மாதிரிக் கட்டடம் ஜனிக்குமோ, அல்லது இத்தாறுமாறே எக்காலமும் நீடித்து நிற்குமோவென்பதையும் முன்னதாகச் சொல்ல யாரும் வல்லரல்லர்.

அங்கிலேயரும் அவர்களைப்போல ஜெர்மன்ஜாதியிலிருந்து உற்பத்தியான சகல தேசஸ்தர்களும் வேண்டுமானால் தங்கள் சிற்பசாஸ்திரத்தைக் கலப்பின்றி காப்பாற்றிக்கொண்டிருக்கலாம். இத்தேசத்திலோவெனில் அவ்வாறுசெய்ய வெகு விரோதங்கள் இருந்தன. அவை யாவை எனில், இத்தேசத்தில் பல நூற்றாண்டுகளாய் மதத்திலும் மற்றும் பற்பல விஷயங்களிலும் பரஸ்பர விரோதமான இரண்டு ஜாதியார் குடியேறியிருந்ததுந்தவிர, இப்போ கொஞ்சக்காலமாய் அவ்விரண்டுக்கும் வேறுபட்ட மதத்தையுடைய மற்றொரு ஜாதியாரும் வந்து சேர்ந்தார்கள். இக்காரணங்களால் ஒன்றற்கொன்று தாரதம்மிய விவாதத்துக்கு ஏதுவாயிற்று. அங்கிலேயர் அவ்விரோதங்களைத் தணிக்க யாதொரு பிரயத்தனமுஞ் செய்தவர்களல்ல. அவர்கள் தங்கள் ஸ்வதேசத்தில் சிற்ப

றால் அப்போதைக்கப்போது அடையும் மாறுதல்களையும், நூதன மாதிரிகளையுமாத்திரமே இத்தேசத்தில் அநுசரித்து வந்திருக்கிறார்கள். அதையும் சாவகாசமாய்ச் செய்துவந்திருக்கிறார்களேயன்றி, உடனுக்குடனேயாவது அநுஷ்டித்தவர்களல்ல. எங்களுக்குள்ளும் குடியிருப்புக் கட்டடங்கள் ஒரு மாதிரியும், தேவாலயங்கள் வேறு மாதிரியுமாயிருக்கின்றன. (Classical) கிளாசிகல் என்ற ஆதிகாலமாதிரிக் கட்டடங்கள் குடியிருப்புக்கு இசைந்தவைகளென்பதும், (Gothic) காதிக் மாதிரி கடவுள் வழிபாட்டுக்கு ஆவசியகமானதென்பதும் இப்பொழுது ஜனங்களுடைய அபிப்பிராயமாயிருக்கிறது. ஆனால் குடியிருப்புக்குக் (Classical) கிளாசிகல் மாதிரி தகுந்ததென்பது சரியல்ல; (Gothic) காதிக் மாதிரியோ தேவாலயங்களுக்குக் கூடவே கூடாது.

நமது முன்னோர்களால் பெற்று நாம் இப்பொழுது வசித்துவரும் கட்டடங்களைச் சகல விஷயத்திலும் இகழ்வது நியாயமின்மையும் நன்றியற்றதுமாம். இந்நகரத்திற் கட்டியிருக்கிற வீடுகளில் அநேகம் இத்தேச வித்தியமானத்துக்குத்தக்கபடியும், இங்கிலாந்துதேசத்தில் நாம் அறிந்திருப்பதைக்காட்டிலும் மிகவும் பெரிதாயும் கட்டப்பட்டிருக்கின்றன. அவற்றுள் சில கட்டடங்கள் இதற்கு முன்னுள்ள கவர்ன்மெண்ட் சிற்பிகள் இக்காலத்துச் சிற்பிகளைப்பார்க்கிலும் அதிகப் பயிற்சியும் ரசஞானமுமுள்ளவர்களாயிருந்ததாக உணர்த்துகின்றன. ஆனால் அக்கட்டடங்கள் வெளிப்பார்வைக்கு இன்பமில்லாமல் எங்கும் ஒரே ரீதியாயும், சுத்தமாய் வர்ணவேலைப்பாடேயில்லாமல் மிகவும் ஆபாசமான சாமான்களையுடையனவாயும் இருக்கின்றன. அல்லாமலும் அதிகாரிகள் இத்தன்மையாய்க் கட்டிவருவது இத்தேசத்தில் ஆதிகாலத்திலுண்டாயிருந்த சகல மாதிரிக்கும் விரோதமாயிருப்பதுமன்றி, இத்தேச ஜனங்களுடைய ரசஞானத்தையும் கெடுக்கத்தக்கதாயிருக்கிறது. (Classical) கிளாசிகல் அல்லது ஆதிகாலத்தின் குடியிருப்புக் கட்டடங்களின் மாதிரி கெட்டதென்றால், (Gothic) காதிக் கோவில்களின் மாதிரி அதிலும் கெட்டதாம்.

சமசீதோஷ்ண தேசத்தில் தேர்ச்சியடைந்த (Gothic) காதிக் கட்டட மாதிரியை அதிக சமர்த்தனும் நுண்ணிய புத்தியையுடையவனுமான சிற்பியால்மாத்திரமேயன்றி, மற்றவர்களால் உஷ்ணதேசத்திற்குப் பொருந்தச்செய்தல் அசாத்தியமாம். பூரணமான கைவேலைப்பாட்டை அபேக்ஷிக்கிற மாதிரிகளெல்லாவற்றிலும் காதிக் மாதிரி மிகுந்த பணச்செலவையுண்டாக்கத்தக்கது. அதற்கு வேண்டிய சாமான்கள் மிகவும் நேர்த்தியாயிருக்கவேண்டும். அச்சாமான்களை மிகவும் நாணயமாய் வேலைசெய்யவேண்டும். மிகச் சிறந்தமாதிரியான சித்திரவேலைகளும் கொத்துவேலைகளும் அதைப் பூர்த்திசெய்வதற்கு ஆவசியகமாக இருக்கின்றன. இவ்விடத்தில் நாம் விசேஷமாய் உபயோகித்துவருகிற செங்கல் அவ்விதக் கட்டடங்களுக்குச் சுத்தமாய் உபயோகிக்கக்கூடாதென்று சொல்ல ஏதுவில்லாவிடினும், அவற்றிற்குச் செங்கல் கொஞ்சமும் ஏற்றதல்ல. சாமானியமான காதிக் கோயில்களைச் சென்னபட்டணத்திலும் வேப்பேரியிலுங் காணலாம். அவை சிறப்பற்றவையாயும், சாமானியமானவையாயும், நாம் நினைக்கும்பொழுதும் விரும்பும்பொழுதும் பிரீதியோடு மதிக்கிற ஆதிகாலத்தில் பிரசித்தமான காதிக் மாதிரிக்குச் சுண்ணாம்பைத் தடவின போலிக் கட்டடங்கள் போலும் இருக்கின்றன. ஆனால் இவைகளைக்காட்டிலும் திறமான கட்டடங்கள் இல்லாதிருக்கவில்லை. திருநெல்வேலி சீமையின் தென்பாகத்திலுள்ள தேரிக்காடுகளின் மத்தியில் மெய்ஞ்ஞானபுரம் என்ற ஊரில் ஊக்கமுள்ள ஒரு கிறிஸ்துமார்க்கக் குருவானவர் ஆதி அங்கிலேய மாதிரியை அநுசரித்து, தன்னுடைய முயற்சியினால் ஒரு கட்டடத்தைக் கட்டியிருக்கிறார். அது இங்கிலாந்திலுள்ள (Lincoln) லிங்கன் (Suffolk) சப்போக் என்னும் நாடுகளைக்கூட அலங்கரிக்கத்தக்க கட்டடமாயிருக்கின்றது. அக்கட்டடத்தில் ஈராயிரம் தமிழ் ஜனங்கள்வரையும் சேர்ந்து கிறிஸ்துசமய ஞானசங்கீர்த்தனஞ்செய்ய நான் கேட்டிருக்கிறேன். மெய்ஞ்ஞானபுரத்துக்குத் தெற்கே இடையன்குடி என்னப்

பட்ட ஊரில் சாணருக்கு ஞானபோதகராயும், நன்றாய்க்
கற்றுணர்ந்தவராயிருந்தாலும் கடவுளுக்குச்செய்யும் பணி
விடைக்குமுன் கல்வி எம்மாத்திரமென்று நினைக்கிறவராயு
மிருக்கிற ஒருவர் இத்தேசத்துக்கொற்றர்களை வடதேசத்துப்
பணிகளிற் பயிர்ச்சிசெய்வித்து, தமது வாழ்நாளின் பயனை
யும், தாம் கடவுளுக்குச் செய்யும் தொண்டுக்கு ஞாபகக்குறி
யாயும் விளங்கத்தக்க அலங்காரமுள்ள ஓர் கட்டடத்தைக்
கட்டிவருகிறார். திண்டுக்கல்லிலும் மற்ற இடங்களிலு
முள்ள ரோமான் கத்தோலிக் சமயத்தாரும் இம்மாதிரிக்
கட்டடங்களைக் கட்டிவருகிறார்கள். இவ்விதக் கட்டடங்க
ளைக் கட்டிவருகிறவர்களுடைய தெய்வபக்தி மெய்ச்சிக்
கொள்ளத்தக்கதாயிருந்தாலும், அம்மாதிரியை அவர்கள் அநு
சரிப்பது சரியென்று நான் சொல்லமாட்டேன். இத்தே
சத்தில் கிறிஸ்துசமயத்துக்கு வேண்டிய கட்டடங்களைக்
(Gothic) காதிக் மாதிரியாய்க் கட்டுவது சரியல்ல. காதிக்
மாதிரி உண்டாவதற்குமுன் ஆயிரவருஷக் காலமாய் கிறி
ஸ்துசமயம் வழங்கிவந்ததுந்தவிர, அம்மாதிரி உண்டான
தன்பின்னும் முன்னூறாண்டுவரையில் அம்மாதிரி கிறிஸ்து
சமயக் கோவில்களுக்கு அநுசரிக்கப்படாமலே இருந்தத
னால், இப்பொழுது அதை அநுசரித்தே தீரவேண்டுமென்
பது அவசியமல்ல. அக்காதிக் மாதிரி இத்தேசத்துச் சிற்ப
நூலின் முறைமைகளுக்கும், கோவில் ஐதீகங்களுக்கும் மிக
வும் விலகியிருப்பதானதால் அதை அநுசரிப்பது யுக்தமு
மல்ல. கிறிஸ்தவக் கட்டட மாதிரியையும் இத்தேசக் கட்
டட மாதிரியையும் ஒன்றோடொன்று பொருந்தும்படி செய்
தல் அசாத்தியமென்றும், அப்படிக்கில்லாமல் ஒருவேளை
சாத்தியமானாலும் அதனால் யாதொரு பயனும் விளையமாட்
டாதென்றும் ஆட்சேபிக்க இடமுண்டு. விசேஷபயன்
விளையமாட்டாதென்பதை நானே ஒப்புக்கொள்ளுகிறேன்.
ஏனெனில் அவரவருடைய மனோவிருப்பத்தைத் திருப்தி
செய்வதற்காக அவ்வாறு பொருந்தச்செய்யவேண்டுமே தவிர
பயனுக்காகவல்ல. அசாத்தியமென்று சொல்லும் கட்சியை

மட்டும் நான் ஒப்புக்கொள்ளமாட்டேன். அவ்வாறு இசையச்செய்யாமற் போவதனால் உண்டாகும் குறைவு சிற்பிகளுடையதேயல்லாமல் சிற்பநூலினதன்று.

குடியிருப்புக்கடுத்த கட்டடங்களுக்கு வேண்டிய சகலவித சிறப்புகளையும் பிரயோஜனங்களையும் மகம்மதியருடைய கட்டட மாதிரி அளிக்கிறதென்று நான் முன்னமே எடுத்துரைத்திருக்கிறேனல்லவா? அம்மாதிரியை ஐரோப்பியரும் அநுசரித்து, தங்கள் குடியிருப்புவீடுகளைக் கட்டுவதில் என் புத்திக்கு ஆட்சேபந்தோன்றவில்லை. அம்மாதிரிக் கட்டடங்களில் எங்களுடைய ஆசாரங்களுக்கும் கோட்பாடுகளுக்கும் பொருந்தாத பகுதி ஒன்றுமில்லை. அவைகளில் யாதொரு பிரதிமையாவது, மதசம்பந்தமான அபிப்பிராயங்களை விளக்கிக்காட்டும் சித்திரவேலைகளாவது, இன்ன ஜாதியாருக்கு அல்லது இன்ன சமயத்தாருக்குமாத்திரமேயுரியதென்று குறித்துக்காட்டும் யாதொரு சின்னமாவது கிடையாது. அவ்வகைக் கட்டடங்களில் பிரதிமைகளின் ஸ்தானத்தில் வரைந்திருக்கும் பார்ஷி, அரபி பாஷைகளின் எழுத்துக்களைத் தவிர்த்துவிட்டு, அதற்குப்பதிலாக மகம்மதிய மாதிரிக்குரிய மற்ற அலங்காரங்களைச் செய்துகொள்ளலாம். மகம்மதிய கட்டடங்கள் பிரதிமை சம்பந்தமானது யாதொன்றுமின்றி சமுதாயமானவைகளாயிருக்கின்றன. இவ்வாறிருந்தாலும் சரித்திரத்திலும் வழக்கத்திலும் தமது சமயநடவடிக்கைகளினின்றும் வேறாகிய சமயத்தையும் நடவடிக்கைகளையுமுடைய ஜாதியாரின் மாதிரியை அநுசரித்துக் கட்டப்பட்ட கட்டடங்களில் வசிப்பதற்கு அங்கிலேயர் ஒருவேளை ஆட்சேபிப்பார்கள். மசிதிலோ கிறிஸ்தவர்கள் கடவுள் ஆராதனையின்பொருட்டு ஒருக்காலும் கூடிவரமாட்டார்களென்பது திண்ணம். அப்படியிருக்க, கிறிஸ்தவ மாதிரியையும் சுதேச மாதிரியையும் இசையச் செய்வதெப்படி? ஐரோப்பிய மாதிரியை இத்தேச மாதிரியோடு எவ்வளவுதூரம் இணங்கச்செய்யக்கூடும்? என்று கேட்டால் அதற்கு ஓர் உபாயமுண்டு. கிறிஸ்தவ மாதிரி இத்தேச மாதிரி

இவ்விரண்டையும் அநுசரித்த மாதிரி ஒன்று உண்டென்று சிற்பநூற்சரித்திரத்தால் விளங்குகின்றது.

பூர்வீக ரோமைச் சிற்பசாஸ்திரத்துக் கட்டட மாதிரிகளை மகம்மதிய சிற்பிகள் நாம் இப்பொழுது (Saracenic) சாரசினிக் என்று சொல்லும் அழகிய மாதிரியாக மாற்றினதுபோலவே, கீழ்த்திசையிலுள்ள கிறிஸ்தவர்கள் அந்த ரோமை மாதிரிகளை வைத்துக்கொண்டே அவற்றிற்கினமான வேறு மாதிரியொன்றை ஏற்படுத்தினார்கள். இம்மாதிரி கொஞ்சக்காலவளவில் வட இத்தலியிலும், ஏஷியா மைனர் என்ற தேசத்திலும் வியாபித்திருந்தது. அது ஜார்ஜியா என்ற நாட்டில் அதிக அழகான ரூபத்தை அடைந்து, ருஷியா தேசஸ்தருடைய தேசாசாரத்துக்கேற்ற சிற்பவேலைக்கு மூலாதாரமாயிற்று. அதற்கு இப்பொழுது (Byzantine) பைஜான்டன் என்று பேராம். இப்பைஜான்டன் மாதிரியும் சாரசன் மாதிரியைப் போலவே கமான்வளைவு, கும்மட்டம் இவைகளை முக்கியமான குறிப்புகளாகக் கொண்டிருக்கிறது. சாரசன் மாதிரியிலுள்ள மீனருக்குப்பதிலாக பைஜான்டன் மாதிரியில் மணிவைத்திருக்கும் தனிக்கோபுரமிருக்கிறது. கீழ்த்திசையிலுள்ள கிறிஸ்தவர்களுக்குக் குதிரைக்குளம்புபோலாவது முனைவைத்தாவது கமான்வளைக்கச் சாதாரணமாய்த் தெரியாது. ஆனால் சுவர்களில் கமான்கள்போல அலங்காரார்த்தமாகக் கட்டும்போது அவை வெளிப்பார்வைக்கு சாரசன் மாதிரிக்கேற்ற அவயவங்கள்போலக் காணும்படிசெய்யத்தெரியும். இத்தன்மையான இணக்கங்கள் சுவரிற்செய்யப்படும் நுண்ணிய சித்திரவேலைகளில் விசேஷமாய் விளங்குகின்றன. பைஜான்டன், சாரசனிக் என்ற இருமாதிரிகளும் எப்பொழுதும் ஒரே இனமாயிருக்கின்றன. இவ்விரண்டிற்கும் பொது உறுப்பான கும்மட்டமானது அவற்றின் ஒற்றுமையை விளக்கும் முக்கிய குறியாம். பைஜான்டன் மாதிரியை அநுசரித்த கட்டடம் குடியிருப்புக்குச் சகல விஷயத்திலும் இசைந்திருப்பதுடன், கிறிஸ்தவ மாதிரிக் கட்டடங்களெல்லாவற்றிலும் மிகச் சிறந்ததாயும் இருக்கின்றது. இதுவே கிறிஸ்தவர்களுடைய பிரதம

மாதிரி. இதைக்காட்டிலும் நேர்த்தியான மாதிரி அவர்களுக்குள் ஏற்பட்டதில்லை. இது ஆதிகாலத்துக் கிறிஸ்தசமயாசாரங்களை அங்கிலேயருக்குச் சூசிப்பிக்கின்றது. இம்மாதிரிக் கட்டடங்கள் ரோமான் மதஸ்தருக்கும் பிரியமாகவே இருக்குமென்பதற்குச் சந்தேகமில்லை. புரோட்டெஸ்டான்டருக்கோவெனில் இது காதிக் மாதிரியைப்பார்க்கிலும் சாதாரணமாயிருப்பதுமன்றி, மிகுந்த ஜனக்கூட்டங்களுக்கும், வாய்மொழி உபதேசத்திற்கும் இசைந்ததாகவும் இருக்கின்றது. அப்படியிருந்தாலும் அம்மாதிரியை அநுசரிக்கும் விஷயத்தில் அநேகர் ஆட்சேபிப்பார்கள். ஆனால் பைஜான்டன் மாதிரி இத்தேசத்தில் கிறிஸ்தவர்களுக்கு சர்வோத்கிருஷ்டமான மாதிரியாகவும், வேறு கலப்பின்றி தனித்து நிற்பதுடன் ஒரு விதத்தில் இத்தேசத்துப் பழைய கட்டடங்களுக்கு ஒத்ததாகவும் இருக்கின்றது.

கனவான்களே! இதுவரையிலும் நான் பிரசங்கித்திராததும், நீங்கள் கேட்டிராததுமான சிற்பநூலைக்குறித்து நீங்கள் முற்றிலும் அறிந்துகொள்ளத்தக்க தெளிவோடு நான் விளக்கிக்காட்டியிராவிட்டாலும், ஒரு விஷயமட்டும் உங்கள் மனதில் பதிந்திருக்குமென்பதைக்குறித்து நான் சந்தேகிக்கவில்லை. அதாவது: உங்கள் தேசத்துக் கைத்தொழில்களின் இயல்பான அழகு சிறப்பு இவைகளினிமித்தமும், அவைகள் உங்கள் பெரியோர்களின் குணவிசேஷங்களை விளக்கிக்காட்டுகிற தன்மையினிமித்தமும் நீங்கள் அவைகளைப் பயின்று பாதுகாக்கவேண்டுமென்று நான் ஆவலோடு விரும்புவதேயாம். இத்தேசத்தில் ஹிந்து, மகம்மது, கிறிஸ்துசமயத்தைச்சேர்ந்த சிறுவர்களுக்கு, தங்களனைவருடைய நேசத்திற்கும் பணிவிடைக்கும் பாத்திரமான தங்கள் சுதேசத்தினிடத்தில் அபிமானங்கொண்டிருக்கவேண்டியது விதிதந்தான். ஆனால் அந்தச் சுதேசாபிமானமானது ஒவ்வொரு ஜாதியாரும் அவரவர்க்குள் மேன்மையாயும் சிறப்பாயுமிருப்பதைப் பேணிக்கொள்வதில் அந்தந்த ஜாதியாருக்கு நியாயமாயுரிய பெருமையைக் குறைக்கமாட்டாது. ஏனெனில் அவ்விதப் பெ

ருமையில் அவர்களெல்லாருக்கும் பொதுவாயிருக்கிற தேசத்தின்மேலுள்ள அபிமானத்துக்கு விரோதமானது யாதொன்றுமில்லை. என் பிரசங்கத்தைக் கேட்கும் இத்தேசத்தவர்கள் அவரவருடைய தேசாசாரத்துக்கொத்த எல்லாவற்றையும் இனிச் சாதாரணமாய் அசட்டைபண்ணுமலும், அந்நியஜாதியாருக்குரிய புதுமைகளைப் பகுத்தறிவின்றி வியக்காமலுமிருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன். இவ்வாறு சொந்தமானதை அசட்டைசெய்து அந்நியமானதை வியத்தல் நூதனமாய் அபிவிர்த்தியாகிக்கொண்டுவருகிற நாகரிகத்தைத் தழுவ முயலும் பூர்வகால நாகரிகமுள்ள ஜனங்களுக்குச் சஹஜகுணமாயிருக்கிறது. நீங்கள் அடுத்திருக்கும் ஐரோப்பியர்கள் உங்களைப்பார்க்கிலும் விசேஷ சாஸ்திரத்தேர்ச்சியையும், கைவேலைப் பயிற்சியையும், ராஜரிகத்துக்குவேண்டிய நீதியான கோட்பாடுகளையும், யுத்தமுகத்தில் மேலான ஆண்மைத்தனத்தையும் உடையவர்களாயிருப்பதனுல் மாத்திரம் அவர்கள் ரசஞான விஷயங்களிலும் சிறந்தவையாயும் உத்தமமாயும் இருக்கின்றவற்றையெல்லாங் கூடக் கைக்கொண்டிருக்கிருர்களென்று நினையாதேயுங்கள். இந்த விஷயத்தில் பிழையெடுத்துக்காட்டுவதற்கும் தர்க்கிப்பதற்கும் உங்கள் மேன்மையை வெளிப்படுத்துவதற்கும் உங்களுக்கு வேண்டிய அவகாசமிருக்கிறது.

இந்தப் பிரசங்கத்திற்குச் சிற்பசாஸ்திரமொன்றே போதுமானதாயிருந்தபடியால், அதன் துணைநூல்களாகிய சித்திரமெழுதல், பிரதிமைநிர்மாணம், சங்கீதம் இவற்றைக்குறித்து இன்னொரு சமயம் வாய்க்குமாகில் அப்போது பிரசங்கிக்க உத்தேசித்திருக்கிறேன்.

முற்றிற்று.